தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

# விவசாய வளர்ச்சிக்கு அறிவியல் தொழில்நுட்பம்



வேளாண் உற்பத்தி பெருகி, விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பதற்கு அறிவியல் தொழில்நுட்பங்கள் பயன்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் 86-ஆவது நிறுவன தினத்தையொட்டி, புது தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு தெரிவித்தார். வேளாண் துறை மேம்பாட்டுக்கு, "ஆய்வகத்திலிருந்து விளைநிலத்துக்கு' எனும் புதிய முழக்கத்தை முன்வைத்து அவர் மேலும் பேசியதாவது: உலக அளவில் வானிலை மாற்றங்களால் இயற்கை வளங்கள் குறைந்துவருகின்றன. எனவே, கூடுதல் அறிவியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, குறைந்த நிலப்பரப்பில், குறைந்த கால அளவில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டும். விவசாயிகளின் வருவாய் பெருக, அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி, அதன் மூலமாகத் தங்களது வருவாயை அதிகரிக்க விவசாயிகள் திட்டமிட வேண்டும். அறிவியல் ஆராய்ச்சியின் பலன்களை நாம் விவசாய நிலத்துக்கு கொண்டு சேர்க்க வேண்டியுள்ளது. வேளாண் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும்

வானொலி நிலையங்கள் அமைத்து, புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளிடையே கூடுதல் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.நமது நாட்டினருக்கு மட்டுமல்லாது, உலகில் உள்ள அனைவருக்கும் உணவளிக்கும் வகையில் நமது விவசாயிகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பது, இத் துறையை அவர்களுக்கு மிகவும் லாபகரமாக்குவது ஆகிய இரு சவால்கள் நம்முன் உள்ளன. விவசாயிகளின் வருவாய் அதிகரித்தாலொழிய, வேளாண் துறை இலக்குகளை எட்ட முடியாது. இதனை உணர்ந்து அரசுக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். நீர்வளம் குறைந்து வரும் பிரச்னையை அடுத்து, "ஒவ்வொரு துளியிலும் கூடுதல் பயிர் விளைச்சல்' என்ற கொள்கையுடன் நாம் செயல்பட வேண்டும். தரத்தில் எந்த சமரசமும் செய்துகொள்ளாமல், குறைந்த கால அளவில் பயிர்களை விளைவிக்க முயற்சியெடுக்க வேண்டியுள்ளது. புதிய உத்திகள் எவ்வாறு நமக்கு கூடுதல் பலனை அளிக்கும் என்பது குறித்து, விவசாயிகள் ஏற்றுக் கொள்ளும்படியாக, எளிய முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும். "ஆய்வகத்திலிருந்து விளைநிலத்துக்கு' எனும் வகையில், வேளாண் ஆராய்ச்சியை அவர்களிடம் எடுத்துச் செல்லும் சவாலை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நமது நாடு வேளாண் துறை சார்ந்த பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், பருப்பு, எண்ணெய் வகைகளை இன்னமும் நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துவருகிறோம். அதிகப் புரதச் சத்துள்ள பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்கி, ஏழை எளிய மக்களுக்கு அவை சென்றடையச் செய்ய வேண்டும். நீலப் புரட்சி: மீன் வளத் துறைக்கு உலக அளவில் பெரும் சந்தை உள்ளது. இந்தத் துறையை மேம்படுத்துவதால், நமது மீனவர்களின் நிலையை உயர்த்தலாம். பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சியைக் கண்டுள்ள நாம் அடுத்ததாக, மீன் வளத்தின் மேம்பாட்டுக்காக "நீலப் புரட்சியை' ஏற்படுத்த வேண்டும் என்றார் பிரதமர் மோடி. விழா தொடங்குவதற்கு முன்னதாக, நாட்டின் வேளாண் உற்பத்திக்கு முக்கியப் பங்களித்துவரும் விவசாயிகளைப் பாராட்டும் வகையில், அரங்கில் உள்ள அனைவரும் எழுந்து கரவொலி எழுப்ப வேண்டும் என பிரதமர் கேட்டுக் கொண்டார்.

## நிரம்பும் நிலையில் சோலையாறு அணை

தொடர்மழை காரணமாக நிரம்பும் நிலையில் உள்ளது சோலையாறு அணை. வால்பாறையில் பருவமழை கடந்த இரண்டு மாதங்களாகப் பெய்து வருகிறது. இதில் கடந்த 10-ஆம் தேதிக்கு மேல் மழை தொடர்ந்து பெய்ததால், வால்பாறை பகுதிகளில் உள்ள அனைத்து ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சோலையாறு அணையின் நீர்த்தேக்கப் பகுதிகளான நடுமலை, சிறுகுன்றா, கெஜமுடி, நல்லகாத்து உள்ளிட்ட ஆறுகளில் பெருக்கெடுத்தோடிய வெள்ளம்,

சோலையாறு அணைக்குச் சென்றதால், அணையின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்ததால் திங்கள்கிழமை காலை நிலவரப்படி 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் 149.5 அடியாக உயர்ந்தது. இதனால் 11 அடி மட்டும் நிரம்பத் தேவைப்படும் நிலையில், கனமழை பெய்தால் செவ்வாய்க்கிழமை நிரம்ப வாய்ப்புள்ளதாகக் கூறப்பட்டது. ஆனால் திங்கள்கிழமை வால்பாறை 13.5 மி.மீ, சோலையாறு 36 மி.மீ, லோயர் நீராறு 38 மி.மீ, அப்பர் நீராறு 50 மி.மீ. அளவிற்கு மழை பெய்துள்ளது. மழையளவு குறைந்ததால் அணைக்கு 2,335.07 கனஅடி நீர்வரத்தாக இருந்து நீர்மட்டம் 2 அடி மட்டும் உயர்ந்தது. செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 151.61 அடியாக இருந்தது. அணை முழுவதுமாக நிரம்ப இன்னமும் 8 அடி மட்டுமே உள்ளது.

**திருச்சி: ஆகஸ்ட் 2-ஆவது வாரம் முதல் வாழை வணிக வளாகம் செயல்படும்**




விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் திருச்சி மாவட்டம், ஜீயபுரம் அருகிலுள்ள திருச்செந்துறையில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகம், ஆகஸ்ட் 2-ஆவது வாரத்தில் செயல்படத் தொடங்குகிறது. அனைத்து வகையிலும் வணிக ரீதியாக பயன்தரக்கூடியது வாழை. மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு 1 லட்சம் ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்பட்டு வந்த நிலையில், வறட்சியின் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக இதன் எண்ணிக்கை சரிபாதியாகக் குறைந்துவிட்டது. திருச்சி மாவட்டத்தில் முசிறி, தொட்டியம், மண்ணச்சநல்லூர், அந்தநல்லூர், மணிகண்டம், லால்குடி, திருவெறும்பூர் உள்ளிட்ட ஒன்றியங்களில் வாழை சாகுபடி அதிக அளவில்

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாழை அறுவடைக்குப் பின்னர் பின்செய் நேர்த்தி, சந்தை சார்ந்த உற்பத்தி போன்றவற்றில் விவசாயிகள் மத்தியில் போதிய அளவில் விழிப்புணர்வு இல்லாததால் 20 முதல் 30% வாழை உபயோகத்துக்கு முன்பே வீணாகிறது. இந்த நிலையில், விவசாயிகள் வாழை அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் இழப்பை சரிகட்டி, விளை பொருள்களை குறைந்த செலவில் பாதுகாத்து, நல்ல விலை கிடைக்கும் போது விற்பனை செய்யும் வகையில், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ.4 கோடியில் திருச்சி மாவட்டம், ஜீயபுரம் அருகிலுள்ள திருச்செந்துறையில் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தை அமைத்திருக்கிறது வேளாண் விற்பனை, வணிகத் துறை. குளிர்பதனக் கிடங்கு: இந்த வாழை வணிக வளாகத்தில் விவசாயிகள் தங்களது வாழையை 15 முதல் 30 நாள் வரை வைத்திருந்து, நல்ல விலைக்கு வரும் போது விற்பனை செய்யும் வகையில் குளிர்பதனக் கிடங்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கிடங்கு 1000 டன் வாழையை பாதுகாத்து குளிர்விக்கும் வசதி கொண்டது. வாழைத்தார்களைக் கழுவி சிப்பம் கட்டும் வசதிகள் கொண்ட அறைகள், தரம் பிரிக்கும் அறைகள், பரிவர்த்தனைக் கூடம் ஆகியவையும் இந்த வளாகத்திலேயே உள்ளன. வாழை வணிக வளாகத்தில் தனியே 15 கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகம் அமைக்கப்பட்டிருப்பதன் மூலம் வாழை விவசாயிகள் தங்களது வாழைகளைத் தரம் பிரித்து, வகைப்படுத்தி மதிப்புக்கூட்ட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளின் வாழைகளுக்கு நல்ல விலை கிடைப்பதுடன், ஏற்றுமதிக்கான வாய்ப்புகளும் அதிகரித்திருக்கின்றன. இந்த வளாகத்தின் மூலம், வாழைச் சார்ந்த உணவு பதனிடும் தொழில்களுக்கும் நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கின்றன. குறைந்த வாடகை: இந்த வளாகம் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நிலையில், இதற்கான தொடர் செலவுகள் திருச்சி விற்பனைக் குழு மூலமாக மேற்கொள்ளப்படும். மேலும், இந்த வளாகத்திலுள்ள 15 கடைகளுக்கான கட்டணம் விவசாயிகளுக்கு பயன் அளிக்கும் வகையில்தான் இருக்கும். குறைந்த அளவிலேயே வாடகைக் கட்டணம் இருக்கும், குளிர்பதனக் கிட்டங்கியில் மின்தடை பிரச்னை ஏற்படாத வகையில் ஜெனரேட்டர்களும் நிறுவப்பட்டுள்ளன என்றார் வேளாண் சந்தை நுண்ணறிவு, வணிக மேம்பாட்டு மைய இயக்குநர் சந்திரசேகர். ஆகஸ்ட் 2-ஆவது வாரத்தில்... தமிழக முதல்வரால் ஜூன் 30-ஆம் தேதி ஸ்ரீரங்கம் அரசு விழாவில் திறந்து வைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகம் ஆகஸ்ட் 2-ஆவது வாரத்தில் செயல்படத் தொடங்கும். அதற்குரிய நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகம் மூலம், வாழை

விவசாயிகள், நுகர்வோர், வியாபாரிகள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறக்கூடிய வசதி ஏற்பட்டிருக்கிறது என்று திருச்சி விற்பனைக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வைகை அணையின் நீர் மட்டம் 10 நாள்களில் 8 அடி உயர்வு

வைகை அணையின் நீர் மட்டம் கடந்த 10 நாள்களில் 8 அடி உயர்ந்துள்ளதால், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். வைகை அணையின் மூலம் தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த 1,36,109 ஏக்கர் பாசன விவசாயத்துக்கும் மற்றும் குடிநீருக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், அணைக்கு நீர்வரத்து இல்லாமல் இருந்தது. இதனால், பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியாமல், குடிநீருக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. அணையின் மொத்த கொள்ளளவு 71 அடியாக உள்ள நிலையில், கடந்த ஜூலை 19 ஆம் தேதி அணையின் நீர் மட்டம் 27.56 அடியாக இருந்தது. இதனால், குடிநீருக்கும் திறந்துவிட முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக தென்மேற்குப் பருவமழை பெய்து வருவதை அடுத்து, அணைக்கு 500 கன அடியிலிருந்து 1500 கன அடி வரை நீர்வரத்து உள்ளது. மேலும், அணையிலிருந்து 955 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால், வைகை அணைக்கு கடந்த 10 நாள்களாக 400 முதல் 500 கன அடி வீதம் நீர் வரத்து உள்ளதால், அணையின் நீர் மட்டம் 8 அடி உயர்ந்துள்ளது.

செவ்வாய்கிழமை மாலை அணைகளின் நிலவரம்:

வைகை அணை: நீர் மட்டம் - 35.60 அடி (71), நீர் வரத்து - 459 கன அடி, நீர் வெளியேற்றம் - 40 கன அடி.

முல்லைப் பெரியாறு: நீர் மட்டம்- 118.70 அடி(152) நீர் வரத்து - 1,392 கன அடி, நீர் வெளியேற்றம் - 955 கன அடி.

மழைப் பொழிவு (மி.மீட்டரில்): பெரியாறு 21.2, தேக்கடி 21, கூடலூர் 2.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை நொடிக்கு 32,898 கன அடியாகக் குறைந்தது. கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வந்த பலத்த மழையால், மேட்டூர் அணைக்கு கடந்த பத்து நாள்களாக நீர்வரத்து அதிகரித்து வந்தது. இதனால், கடந்த 18-ஆம் தேதி 47.94 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், செவ்வாய்க்கிழமை (ஜூலை 29) காலை 80.09 அடியாக உயர்ந்தது. கடந்த பத்து நாள்களில் அணையின் நீர்மட்டம் 32.15

அடி உயர்ந்தது. மேட்டூர் அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வந்ததால், காவிரி டெல்டா பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இந்த நிலையில், திங்கள்கிழமை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 40,215 கன அடியாக இருந்தது, செவ்வாய்க்கிழமை காலை நீர்வரத்து நொடிக்கு 32,898 கன அடியாகக் குறைந்தது. ஒகேனக்கல்லிலும் நீர்வரத்து குறைந்தது: ஒகேனக்கல் காவிரியாற்றில் திங்கள்கிழமை மாலை நொடிக்கு 33 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து, செவ்வாய்க்கிழமை 25 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது. கடந்த சில நாள்களாக, பிரதான அருவிக்குச் செல்லும் நடைபாதையை மூழ்கடித்து தண்ணீர் சென்றது. தற்போது, நீர்வரத்து குறைந்ததால் நடைபாதைக்கு கீழாக தண்ணீர் செல்கிறது. இருப்பினும், அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க விதிக்கப்பட்ட தடை 12-வது நாளாக நீட்டிக்கப்பட்டது. இதனால், ரம்ஜான் பண்டிகை விடுமுறை நாளில் சுற்றுலாப் பயணிகளின்றி ஒகேனக்கல் வெறிச்சோடிக் காணப்பட்டது. நீர்வரத்து தொடர்ந்து குறையும்பட்சத்தில், ஆடிப்பெருக்கு பண்டிகையன்று பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் ஒகேனக்கல் அருவிகளிலும், காவிரியிலும் நீராட அனுமதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மாநில அளவில் வேளாண் குறைகேட்பு கூட்டம் நடத்த கீழ்பவானி விவசாயிகள் சங்கம் கோரிக்கை

ஈரோடு, ஜூலை 29: மாநில அளவில் வேளாண் குறைகேட்புக் கூட்டம் நடத்த வேண்டும் என கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இச் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் ஈரோட்டில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு சங்கத் தலைவர் செ.நல்லசாமி தலைமை வகித்தார். செயலர்கள் விஸ்வநாதன், சுந்தரமூர்த்தி, துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: கீழ்பவானி அணையில் இப்போது 10 டி.எம்.சி தண்ணீர் உள்ளது. நீலகிரி நீர்மின்னணைகளில் போதிய நீர் உள்ளது. ஆடி 18 பண்டிகைக்காக பவானிசாகர் அணையிலிருந்து, கீழ்பவானி 1-ம் மண்டலத்துக்கு ஆகஸ்ட் 1-ம் தேதி முதல் 15 நாள்களுக்குத் தண்ணீர் திறக்க வேண்டும். இதைத் தொடர்ந்து ஆகஸ்ட் 15-ம் தேதியில் இருந்து, கடந்த 3 ஆண்டுகளாகப் பாசனம் பெறாத, கீழ்பவானி 2-ம் மண்டலத்துக்கு, தொடர்ந்து 4 மாதங்களுக்குத் தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட அளவிலான பிரச்னைகளை எடுத்துச் சொல்லவும், தீர்வு காணவும் மாவட்ட அளவிலான வேளாண் குறைகேட்புக் கூட்டம் உதவியாக உள்ளது. இக் கூட்டத்தில் மாநில அளவிலான பிரச்னைகளை எடுத்துச் சொல்ல முடிகிறது என்றாலும், தீர்வு காண முடிவதில்லை. இந்தக்

குறையைத் தீர்க்க, மாதம்தோறும் மாநில அளவிலான வேளாண் குறைகேட்புக் கூட்டத்தை சென்னையில் நடத்த மாநில அரசு முன்வர வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் வாரத்தில் 2 நாள் திறந்தமுறை ஏலம்

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிகுளத்தில் உள்ள வெங்காய வணிக வளாகத்தில் திங்கள் மற்றும் வியாழக்கிழமையில் திறந்தமுறை ஏலம் நடைபெறும் என்றார் வேளாண்மை துணை இயக்குநர் செ. சுப்ரமணியன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடந்த 24-ம் தேதி செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று வாரத்தில் திங்கள் மற்றும் வியாழன் ஆகிய இரண்டு நாள்களில் ஏலம் நடைபெற உள்ளது. விவசாயிகள் மறைமுக ஏலத்தில் கலந்துகொள்ளும்போது வெங்காயத்தை விற்பதற்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் ஏற்படும் சிரமங்களை தெரிவித்ததைத் தொடர்ந்து, மறைமுக ஏலத்துக்குப் பதிலாக திறந்தமுறை ஏலம் ஒவ்வொரு குவியலுக்கும் தனித்தனியாக நடத்தி உடனடி பணப்பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை திறந்தமுறை ஏலம் நடைபெறும்.எனவே, விவசாயிகள் தங்களிடமுள்ள சின்ன வெங்காயத்தை முற்பகல் 11 மணிக்குள் செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். வியாபாரிகள் தங்களது பெயரை பதிவு செய்த பின் ஏலத்தில் கலந்துகொள்ளலாம். அதிக விலை குறிப்பிடும் வியாபாரிக்கு வெங்காயம் விற்பனை செய்யப்படும். ஏலம் எடுத்ததற்கான தொகையை வியாபாரிகளால் விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## சம்பா சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள்

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கான முன்னேற்பாட்டு பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். மாவட்டத்தில் காவிரி நீரை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் குறுவை சாகுபடி கடந்த 3 ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட நிலையில், சம்பா சாகுபடி மட்டுமே ஓரளவுக்கு நடைபெற்று வருகிறது. விவசாயிகளையும், விவசாயத்தையும் பாதுகாக்கும் வகையில் தமிழக அரசு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவித்து, வேளாண் கருவிகள் மற்றும் இடுபொருள்களை மானிய விலையில் வழங்கி வருகிறது. நிகழாண்டுக்கான

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தேவையான வேளாண் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதைக்கொண்டு திருவாரூர், குடவாசல், வலங்கைமான், நீடாமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் ஆழ்துளை கிணறு பாசனம் மூலம் சுமார் 10,000 ஹெக்டேரில் குறுவை சாகுபடி நடைபெற்று வருகிறது. இதனிடையே, மேட்டூர் அணையில் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதால், நிகழாண்டில் சம்பா சாகுபடியை மேற்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர். சம்பா சாகுபடிக்காக தற்போதே நிலத்தை உழவு செய்வது, சமன் செய்வது உள்ளிட்ட பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். ஆகஸ்ட் 2-வது வாரத்தில் நேரடி நெல் விதைப்பு (தெளிப்பு விதை), ஆக. 15 தேதிக்கு மேல் நாற்றுவிடும் பணியைத் தொடங்கினால் பருவமழை, காற்று, பனியில் சிக்காமல் நெல்மணிகள் நன்றாக வளர்ந்து அறுவடைக்குத் தயாராகும் என்பதால் விவசாயிகள் சம்பாவுக்கான முன்னேற்பாடாக புழுதி உழவு உள்ளிட்டப் பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

**அரசு கிடங்குகளுக்கு உரம் விநியோகம்அரசு கிடங்குகளுக்கு உரம் விநியோகம்**

கடலூர் மாவட்ட அரசு கிடங்குகளுக்குத் தேவையான காம்ப்ளக்ஸ் உரம் ரயில் மூலம் திங்கள்கிழமை விருத்தாசலத்துக்கு வந்தது. ஒடிஸா மாநிலம் இப்கோ நிறுவனத்தில் இருந்து கடலூர் மாவட்ட விவசாயத் தேவைகளுக்காக 42 பெட்டிகளில் 2600 டன் காம்ப்ளக்ஸ் உரம் கொண்டுவரப்பட்டது. பின்னர், கடலூர் மாவட்டத்தில் உள்ள அரசு கிடங்குகளுக்கு தேவையான காம்ப்ளக்ஸ் உரம் லாரிகள் மூலம்அந்தந்தப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விவசாயிகளை கவர 'அம்மா விதைகள்': அரசின் அடுத்த திட்டத்திற்கு ஏற்பாடு

தமிழக விவசாயிகளை கவர, 'அம்மா விதைகள்' என்ற திட்டத்தை தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்த, தீவிர ஏற்பாடு நடந்து வருகிறது. அரசு விதை பண்ணைகள் மூலம் தயாரிக்கப்படும், விதைகள், தோட்டக்கலைத் துறை மூலம், விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட உள்ளது. விவசாயி களுக்கு குறைந்த விலையில் மட்டுமின்றி, 100 சதவீத மானியத்திலும்,

இத்திட்டம் செயல்படுத்துவதற்கான ஏற்பாடு நடந்து வருகிறது. இத்திட்டம், விவசாயிகளிடம் வரவேற்பை பெற்றால், வேளாண் துறைக்கும் விரிவுப்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது.நாளை, சட்டசபையில், வேளாண் துறை மானிய கோரிக்கை மீதான விவாதம் நடக்கிறது. அப்போது, வேளாண் துறை அமைச்சரால், இத்திட்டம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என, தெரிகிறது.அன்றைய தினம் அறிவிக்கப்படாவிட்டால், 110வது விதியின் கீழ், வேளாண் துறை சார்ந்த அறிவிப்புகளை வெளியிடும்போது, இத்திட்டத்தை முதல்வர் அறிவிப்பார் என கூறப்படுகிறது.

## நதிகள் இணைப்பு திட்டத்திற்கு சிறப்பு முன்னுரிமை: கருணாநிதி

சென்னை:"கேரள அரசின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல், இந்தியாவின் நன்மை கருதி, நதிகள் இணைப்பு திட்டத்திற்கு, மத்திய அரசு சிறப்பு முன்னுரிமை கொடுத்து, விரைவில் நிறைவேற்ற வேண்டும்," என, தி.மு.க., தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பான, அவரது அறிக்கை:ஐ.மு., கூட்டணி ஆட்சிக்கு முன், வாஜ்பாய் பிரதமராக இருந்த போது, நாடு முழுவதும் உள்ள நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு, அதிக முக்கியத்துவம் தரப்பட்டது.நதிகளை இணைக்க, மத்திய அரசு ஆர்வம் காட்டினாலும், கேரளா போன்ற சில மாநில அரசுகள், இதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன. அவற்றைப் பொருட்படுத்தாமல், இந்தியா முழுமைக்குமான நன்மை கருதி, நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு பா.ஜ., அரசு, சிறப்பு முன்னுரிமை கொடுத்து, விரைவில் திட்டத்தை நிறைவேற்ற முன் வர வேண்டும். அடுத்த மாதம் 18ம் தேதி முதல் 20ம் தேதி வரை கொழும்பில், இலங்கை ராணுவம் கருத்தரங்கம் நடத்துகிறது. அதில், இலங்கை ராணுவம் சார்பில் மேஜர் ஜெனரல் தகுதியில் உள்ள உயர் அதிகாரிகளும், பா.ஜ., சார்பில் மூத்த தலைவர் சுப்ரமணிய சாமி தலைமையிலான குழுவினரும் பங்கேற்கவுள்ளனர் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்தக் கருத்தரங்கம், முக்கியமாக இலங்கை நட்பு நாடுகள், எத்தகைய பாதுகாப்பு ஒத்துழைப்பை வழங்கும் என்பதை முடிவு செய்யுமாம். 'குதிரை குப்புறத் தள்ளியதோடு, குழியும் தோண்டிய கதை' போலத்தான் இந்தியாவின் இந்த முடிவு உள்ளது.இலங்கை தமிழர் பிரச்னையில், மத்திய அரசு எதிர்மறை அணுகுமுறையையே கொண்டுள்ளது. காங்கிரஸ்

அரசை போல நடந்து கொள்ளாமல், தமிழ் இனத்தை பாதுகாக்கும் நோக்கில் நடந்து கொள்ள வேண்டும்.இவ்வாறு, கருணாநிதி கூறியுள்ளார்.

## கரும்பு விவசாயிகளை திருப்திபடுத்த ஏற்பாடு: அதிக மானிய திட்டங்களுக்கு வாய்ப்பு

நிலுவைத் தொகையை உரிய நேரத்தில் பெற்று தராததால், கடும் விரக்தியில் இருக்கும் கரும்பு விவசாயிகளை திருப்திபடுத்த, பல்வேறு மானிய திட்டங்களை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது. தமிழகத்தில் ஆண்டுதோறும், 8.40 லட்சம் ஏக்கரில், கரும்பு சாகுபடி நடக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக, தண்ணீர் தட்டுப்பாடு இருப்பதால், நெல்லுக்கு மாற்றாக, கரும்பு சாகுபடியில், விவசாயிகள் பலரும் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால், 50 ஆயிரம் ஏக்கர் வரை, கரும்பு சாகுபடி பரப்பு அதிகரித்தது. கரும்பு கொள்முதல் விலையை, மத்திய, மாநில அரசுகள் இணைந்து நிர்ணயித்து வருகின்றன. இந்தாண்டுக்கான, கொள்முதல் விலை, டன்னுக்கு, 2,650 ரூபாய். ஆனால், கடந்த ஜனவரி முதல், கொள்முதல் செய்த கரும்புக்கான பணத்தை, சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு தரவில்லை. இந்த நிலுவை தொகை, 527 கோடி ரூபாய். 'நிலுவைத் தொகையை, 29ம் தேதிக்குள் தர வேண்டும் என, சர்க்கரை ஆலைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது' என, தொழில் துறை அமைச்சர் தங்கமணி, சட்டசபையில் தெரிவித்தார். இதை, தனியார் சர்க்கரை ஆலைகள், நிறைவேற்றவில்லை. கரும்பு நிலுவைத்தொகை பெற்று தராததால், அடுத்தக்கட்ட சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். இப்பிரச்னை, ஓராண்டாக நீடிக்கிறது. இதனால், அரசின் மீது, விவசாயிகள் கடும் அதிருப்தியில் உள்ளனர். அவர்களை திருப்திப்படுத்த, கரும்பு சாகுபடிக்கான சிறப்பு திட்டங்களை, அரசு வகுத்து வருவதாக தெரிகிறது. இதுகுறித்து, வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது: கரும்பு உற்பத்தியை பெருக்க, நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம், சொட்டு நீர் வழி உரமிடல், திசு வளர்ப்பு முறை சாகுபடி நடைமுறையில் உள்ளது. பாசன பற்றாக்குறையை தவிர்க்க, சொட்டுநீர் பாசனமுறை செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மற்ற விவசாயிகளுக்கு, 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. அனைத்து விவசாயிகளுக்கும் இனி, 100 சதவீத மானியம் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படுகிறது. கரும்பு உற்பத்தி திறனை அதிகரிக்க, மண்புழு உரம், உயிர் உரம் உள்ளிட்டவற்றை விவசாயிகளே உற்பத்தி செய்வதற்கும் மானியம் வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது. இவற்றோடு, மேலும் பல மானிய

திட்டங்கள் குறித்த அறிவிப்புகளும், விரைவில் வெளியாக வாய்ப்பு உள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## 'மெகா' விவசாய கண்காட்சி ஆக.,1 ல் மதுரையில் துவக்கம்

திண்டுக்கல்: தென் மாவட்ட விவசாயிகளுக்காக, 'குடும்ப பண்ணையம் மூலம் லாபகரமான கால்நடை, கோழி வளர்ப்பு' என்ற 'மெகா' கண்காட்சி மதுரையில் ஆக.,1 ல் துவங்குகிறது.கண்காட்சிக்கான விவசாயிகள் ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் பேராசிரியர் பீர்முகமது கூறியதாவது: பண்ணைத் தொழிலில் உற்பத்தி செலவை குறைத்து லாபம் அளிக்கும் வகையில் தொழில்நுட்பங்கள் வந்துவிட்டன. தொழிலாளர் பற்றாக்குறையை போக்க, நவீன கருவிகள் தயாரிக்கப்பட்டு உள்ளன. இதை விவசாயிகள் அறிந்து கொள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சார்பில், மதுரை மடீட்சியா அரங்கில் ஆக.,1, 2ல் 'மெகா' கண்காட்சி நடக்கிறது. 'குடும்ப பண்ணையம் மூலம் லாபகரமான கால்நடை, கோழி வளர்ப்பு' கண்காட்சியில் தொழில்நுட்ப விரிவுரை, செயல்விளக்கம், உழவர் விவாதம், புதிய ரகங்கள் அறிமுகம், பண்ணைக் கருவிகள், மதிப்பூட்டப்பட்ட உற்பத்தி பொருட்கள் உள்ளிட்ட அனைத்தும் இடம்பெறும். இக்கண்காட்சியில் மதுரை, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் உள்ளிட்ட 11 மாவட்ட விவசாயிகள் பங்கேற்கலாம்.
இவ்வாறு கூறினார். விபரங்களுக்கு, 94433 21882 ல் தொடர்பு கொள்ளலாம்.

## பெரியாறு அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு

கூடலூர் : பெரியாறு அணையில் பெய்த மழையால் அணைக்கு மீண்டும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் கடந்த வாரம் தொடர்ந்து மழை பெய்தது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் உயர்ந்தது. கடந்த நான்கு நாட்களாக நீர்பிடிப்பு பகுதியில் மழை குறைந்ததால் நீர்மட்டம் உயரவில்லை. நேற்று முன்தினம், அணைப் பகுதியில் கன மழை பெய்து மீண்டும் நீர்வரத்து உயந்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 118.70 அடி. நீர்வரத்து 1392 கன அடியாக அதிகரித்தது. தமிழகப் பகுதிக்கு 955 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 2394 மில்லியன் கன அடி. நீர்பிடிப்பு பகுதியில் மேகமூட்டத்துடன் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்பு உள்ளது. மழை அளவு (மி.மீ.,): பெரியாறு 2; தேக்கடி 21; கூடலூர் 2.

## தோட்டக்கலைத்துறையின் இருமடங்கு உற்பத்தி திட்டம்

தேனி : விவசாயம் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் 'இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு லாபம்' என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்துறைகளின் களப்பணியாளர்கள் விவசாயிகளை சந்தித்து தொழில்நுட்ப செய்திகளையும், தகவல்களையும் வழங்க புதிய நடைமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்த பயிற்சி வழித்தொடர்பு திட்டம் என்ற நடைமுறையில் சில மாறுதல்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.
இத்திட்டப்படி, களப்பணியாளர்கள் வாரத்தில் குறிப்பிட்ட நாள், அங்கு தங்கியிருந்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப செய்திகளை வழங்க வேண்டும். பயிர் சாகுபடி பகுதிகளை நேரடியாக ஆய்வு செய்து தொழில்நுட்ப உதவிகள் வழங்க வேண்டும். விவசாயிகளை ஒருங்கிணைத்து குழு அமைக்க வேண்டும். வாரந்தோறும் சந்தித்து தகவல்களை பகிர்ந்து, விளைச்சலை பெருக்குவதற்கும் விற்பனை வசதிகளை அதிகரிப்பதற்கும் உதவ வேண்டும். இதன் மூலம் விவசாயிகளுக்கு இருமடங்கு உற்பத்தியும், மும்மடங்கு லாபமும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பணிகளை துணை இயக்குனர் நேரடியாக கண்காணித்து அரசுக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

### கெடிலம் ஆற்றில் தடுப்பணை பணி ஆக.31ல் முடியும் : பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் பேட்டி

கடலூர்: ""கடலூர், கெடிலம் ஆற்றில் கட்டப்படும் தடுப்பணை பணி, வரும் ஆகஸ்ட் 31ம் தேதிக்குள் முடிக்கப்படும்'' என பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர் கூறினார். கடலூர், கெடிலம் ஆற்றில் போதிய நீர்வரத்து இல்லாததாலும், அளவுக்கு அதிகமாக மணல் அள்ளப்பட்டதாலும், கடல் நீர் கெடிலம் ஆற்று வழியாக உட்புகுந்து நிலத்தடி நீரை பாழ் படுத்தி வருகிறது. இதனைத் தவிர்க்கவும், நிலத்தடி நீர் வளத்தை பெருக்கவும், ஆற்றில் தடுப்பணை கட்ட வேண்டும் என பல்வேறு அமைப்புகள் கோரிக்கை விடுத்தன. அதனை யேற்று நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதியுதவியுடன் கெடிலம் ஆற்றில் கடலூர், கூத்தப்பாக்கம் அருகே 16 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பில் தடுப்பணை கட்டும் பணி கடந்த பிப்ரவரி மாதம் துவங்கியது. இத்திட்டத்தில் ஆற்றில் தடுப்பணை கட்டும் பகுதியில் இருந்து மேற்கு பகுதியில் 2.5 கி.மீ., நீளத்திற்கும், கிழக்கில் 500 மீ., நீளத்திற்கு கரையின் இருபுறமும் 7 அடி உயர்த்தப்பட்டு வருகிறது. ஆற்றில் 2 மீ., உயரத்திற்கு தண்ணீர் தேக்கும் வகையில் ஆற்றின் குறுக்கே 250 மீ., நீளத்திற்கு, 2 மீ., உயரம், 1.5 மீ., அகலத்தில் தடுப்பணை கட்டப்பட்டு வருகிறது. அணையின் கிழக்கு பகுதியில், 12 மீ., அகலத்தில் 8 மீ., ஆழத்தில் "டை பிரேம் வால்' தொழில் நுட்பத்தில் "கான்கிரீட்' தளமும், அதற்கு கிழக்கே 11 மீ., அகலத்தில் கான்கிரீட் பிளாக்குகளும், கிழக்கே

14 மீ., அகலத்தில் கருங்கல் படுகையும் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளை பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர் (நீர்வள நிலவள திட்டம்) அசோகன் நேற்று ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:
நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கும் வகையில் 16.24 கோடி ரூபாய் செலவில் தடுப்பணை கட்டப்பட்டு வருகிறது. 85 சதவீத பணிகள் முடிந்துள்ளது. வரும் ஆகஸ்ட் 31ம் தேதிக்குள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி நிறைவு பெற்றால், ஆற்றை ஒட்டியுள்ள 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படும்.கெடிலம் ஆற்றில், நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையிலிருந்து கழிவு நீர் வெளியேற்றப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் நீர் சுத்திகரிக்கப்பட்ட நீரா என்பதை மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் ஆய்வு செய்ய பரிந்துரைத் துள்ளோம். சுத்திகரிக்கப்படாத நீராக இருந்தால், அதனை ஆற்றில் விடாமல் மாற்று வழியில் வெளியேற்ற அரசு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு தலைமைப் பொறியாளர் அசோகன் கூறினார். பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் (வெள்ளாறு வடிநில வட்டம்) பன்னீர்செல்வம், செயற் பொறியாளர்கள் சின்னராசு, செல்வகுமார், உதவி செயற் பொறியாளர் அன்பரசு, உதவி பொறியாளர் குமார், தரக்கட்டுப்பாட்டு பொறியாளர்கள் அகிலா, தமிழ்செல்வி, விஜயராகவன் உடனிருந்தனர்.

## 'சோலார்' பம்பு செட்டுக்கு அரசு மானியம் தாராளம்! மின் இணைப்புக்கு காத்திருப்பு தேவையா

மதுரை : விவசாயிகள் இலவச மின்இணைப்புக்காக பல ஆண்டுகளாக காத்திருக்க வேண்டியிருப்பதால், அதிக செலவின்றி, அரசு தரும் மானியத்தில் 'சோலார்' பம்புசெட்டுகளை அமைத்து பயன்பெறலாம். விவசாயத்திற்கு அரசு இலவச மின்சாரம் வழங்குவதால், அதற்கான இணைப்பு கேட்டு, மாவட்ட அளவில் பலர் காத்திருக்கின்றனர். பதிவு மூப்புப்படி 2001ம் ஆண்டுக்கே சமீபத்தில்தான் இணைப்பு வழங்கப்பட்டு வருவதாக, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அதிகாரிகள் தெரிவித்தனர்.அப்படி இருக்கையில், இப்போது புதிதாக பதிவு செய்வோர் இன்னும் 10 ஆண்டுகளாவது காத்திருக்க வேண்டும். அரசு மானியத்துடன் 'சோலார் பேனல்'களை அமைத்தால், இந்த காத்திருப்புக்கு அவசியமில்லை. பகலில் பம்புகளை இயக்க தடையற்ற மின்சாரத்தை பெறலாம். போர்வெல் கிணறுகள், திறந்தவெளி கிணறுகள் மற்றும் (சர்பேஸ் வெல்) தரைமேல் தொட்டிகளில் இருந்து நீரை எடுக்கும் பம்பு செட்டுகள் அமைக்க அரசு

நான்கில் மூன்று பங்கு மானியத்தை தருகிறது. ஒரு பங்கு தொகையை மட்டும் விவசாயி வழங்கினால் போதும்.விவசாயிகளுக்கு ஒதுக்கீடு: இத்திட்டத்தில் போர்வெல் சோலார் பம்பு செட் அமைப்பதற்கு 39 பேருக்கு பணிஆணை வழங்கப்பட்டுள்ளது. திறந்தநிலை கிணறுகளில் விவசாயம், தோட்டக்கலை, விவசாய பொறியியல் துறை என மூன்று துறைகளுக்கும் சேர்த்து, மதுரை மாவட்டத்தில் 42 பேருக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 29 பேருக்கு பணிஆணை வழங்கப்பட்டுள்ளது. அலங்காநல்லூரில் விவசாயி பிரபாகரன் என்பவர் மட்டும் தற்போது தனது வயலில் சோலார் பம்பு செட்டை நிறுவி பயன்பெற்றுள்ளார். சோலார் பேனலுக்கான செலவு தொகையில் முக்கால் பங்கை அரசே வழங்குகிறது. ஒருமுறை முதலீடான இதற்கு, 40க்கு 20 அடி இடம் போதும். மின்சாரத்தை எதிர்பார்த்து இரவு நேரங்களில் தண்ணீர் பாய்ச்சும் சிரமம் இல்லை. விண்ணப்பித்தால் அனுமதி வழங்க விவசாய அதிகாரிகள் தயாராக உள்ளனர். விவசாயியின் பட்டியலை தந்தால், தாங்களே நேரில் சென்று, அவர்களின் பங்குத் தொகையை கடனாக வழங்கத் தயார் என, கூட்டுறவு வங்கி அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர். அதிகாரி வேண்டுகோள்: விவசாய இணை இயக்குனர் ஜெயசிங்ஞானதுரை கூறுகையில், "விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு தாமதிக்காது அனுமதி வழங்க அரசு தயாராக உள்ளது. விவசாயிகள் அரசு மானியத்தை பயன்படுத்தி, சோலார் பேனல்களை அமைக்க முன்வரவேண்டும்" என்றார். திட்டம் மொத்த செலவு அரசு மானியம் விவசாயி பங்கு (ரூ., லட்சத்தில்)போர்வெல் கிணறு 4.39 3.35 1.04 திறந்தவெளி கிணறு 5.01 3.84 1.17தரைமேல் தொட்டி 5.24 3.99 1.24

## உழவர் பாதுகாப்பு திட்ட தகவல் அட்டை

காஞ்சிபுரம் : உழவர் பாதுகாப்பு திட்டம் குறித்த தகவல் அட்டையை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க, மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உள்ள அம்சங்கள், மானியம், உதவித்தொகை போன்ற விவரங்களை விவசாயிகள் முழுமையாக அறிந்து கொள்ள முடியவில்லை. இதனால், திட்டத்தின் பலன் முழுமையாக கிடைப்பதில் பிரச்னை இருந்து வருகிறது என, விவசாயிகள் புகார் தெரிவித்து வந்தனர். இதுதொடர்பாக, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் மாவட்ட

ஆட்சியரிடம் விவசாயிகள் தெரிவித்தனர். இதையடுத்து, உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உள்ள அம்சங்கள் அனைத்தும் அடங்கிய தகவல் அட்டையை தயார் செய்ய, வேளாண் துறைக்கு ஆட்சியர் உத்தரவிட்டார். அதன்பேரில் திட்டத்தின் அனைத்து விவரங்கள் அடங்கிய தகவல் அட்டையை வேளாண் துறை தயார் செய்துள்ளது. இவற்றை மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் விரைவில் வழங்கவுள்ளது என, வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பயறு வகைகள் விதைகளுக்கு 25 சதவீதம் மானியம்

திருத்தணி : 'பயறு வகைகள் பயிரிடும் விவசாயிகளுக்கு, ஒரு கிலோ விதைக்கு, 25 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது' என, வேளாண் துறை அதிகாரி தெரிவித்தார். திருத்தணி ஒன்றியத்தில், 27 ஊராட்சிகளில், 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ளனர். இதுகுறித்து, திருத்தணி வேளாண் உதவி இயக்குனர் பிரசாத் கூறியதாவது: பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு, விதைகள் ஒரு கிலோவிற்கு, 25 சதவீதம் மானியம் வழங்கப்படும். உளுந்து மற்றும் பச்சப்பயறு பயிரிட ஒரு ஏக்கருக்கு, 8 கிலோ விதைகள் தேவைப்படும். துவரை, ஒரு ஏக்கருக்கு இரண்டரை கிலோ தேவைப்படும்.இது தவிர, இந்த பயிர்களுக்கு, உயிர் உரங்கள், 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும். மேலும், ஜிப்சம் வாங்கும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். பயறுவகை விதைகள் மற்றும் ஜிப்சம் அனைத்து விவசாயிகள், திருத்தணி வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் கே.ஜி.கண்டிகை வேளாண்மை விரிவாக்க மையம் ஆகிய இடங்களில் வேலை நாட்களில் காலை, 9:45 மணி முதல், மாலை, 5:45 மணி வரை விற்கப்படும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## 'குறைவான விதையில் அதிக விளைச்சல்'

திருவள்ளூர் : விதை முளைப்புத் திறன் அதிகம் உள்ள, குறைந்த விதை மூலம், அதிக விளைச்சல் பெறலாம், என, விவசாயிகளுக்கு, வேளாண் விதை அலுவலர் ஆலோசனை வழங்கி உள்ளார். திருவள்ளூர் மாவட்ட, வேளாண் விதை அலுவலர் ஞானசேகரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:நெல் நேரடி விதைப்பு மற்றும் புழுதிகால் விதைப்பில், தரமான நல்ல முளைப்புத் திறன் உள்ள, விதைகளை விதைத்தால், பயிர் நல்ல வளர்ச்சி அடைந்து, அதிக கதிர்களும்,

அதிக மணிகளும் உருவாகி, மகசூல் அதிகம் கிடைக்கும். எனவே, விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள், தங்களிடம் உள்ள, நெல் விதைகளின் முளைப்புத்திறனை அறிய, 400 கிராம் விதை மாதிரியுடன், திருவள்ளூர், ஆயில் மில் பேருந்து நிறுத்தம், பெரியகுப்பத்தில் உள்ள, வேளாண் விதை பரிசோதனை ஆய்வகத்தை நாடலாம். கட்டணம் 30 ரூபாய். விதை மாதிரி கிடைக்கப்பெற்ற, 14 நாட்களில், பரிசோதனை முடிவுகள் வழங்கப்படும்.இவ்வாறு, அதில் கூறப்பட்டு உள்ளது.

## காய்கறிகளின் விலை உயர்வால் சந்தையில் விற்பனை குறைவு

ரிஷிவந்தியம்: ரிஷிவந்தியம் வாரசந்தையில் வழக்கத்திற்கு மாறாக காய்கறிகளின் விலை இருந்ததால் விற்பனை குறைந்தது. ரிஷிவந்தியத்தில் வாரம் தோறும் வெள்ளிக்கிழமை சந்தை நடக்கும். இதில் சுற்று வட்டார கிராமத்தில் இருந்து காய்கறி வியாபாரிகள் கலந்து கொள்கின்றனர். நேற்று முன்தினம் நடந்த வாரச் சந்தையில் தக்காளி கிலோ 40 ரூபாய்க்கும், வெங்காயம் கிலோ 28 ரூபய்க்கும், உருளைக்கிழங்கு கிலோ 30 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. காய்கறிகளை வாங்க வந்திருந்த பொதுமக்கள் விலையை கேட்டு அதிருப்தியடைந்தனர். பலர் குறைந்த காய்கறிகளை வாங்கிச் சென்றனர். எதிர்பார்த்த அளவு விற்பனை ஆகாததால் வியாபாரிகளும் கவலையடைந்தனர்.

## முல்லை அரும்பு பறிக்கும் பணி கூலி தொழிலாளர்கள் மும்முரம்

திருவெண்ணெய்நல்லூர்: திருவெண்ணெய்நல்லூர் அருகே முல்லை அரும்பு பறிக்கும் பணியில் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். திருவெண்ணெய் நல்லூர் அடுத்த மேல்தனியாலம்பட்டு, கீழ்தனியாலம்பட்டு, குச்சிப்பாளையம், டி.குமாரமங்கலம், பொய்கை அரசூர் ஆகிய பகுதிகளில் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பல ஏக் கர் பரப்பளவில் முல்லை அரும்பு பயிரிட்டுள்ளனர். தற்போது தோட்டத்தில் விளைந்த பூக்களை தொழிலாளர்களை கொண்டு பறித்து பண்ருட்டி, விழுப்புரம், திருவெண்ணெய்நல்லூர் பகுதிக்கு அனுப்புகின்றனர். காலை 6:00 மணி முதல் மதியம் 1 மணி வரையிலும், மாலை 4:00 மணி முதல் 6 மணி வரையிலும் பூக்களை பறிக்கின்றனர். பூக்கள் பங்குனி மாதத்திலிருந்து கார்த்திகை மாதம் வரையில் பூப்பதாகவும், முகூர்த்த நாட்களில் கிலோ

ஒன்றுக்கு 300 ரூபாய் வரையிலும், சாதாரண நாட்களில் 160 ரூபாய் கிடைப்பதாகவும் விவசாயிகள் கூறினர். தை மாதத்தில் செடிகளை அறுத்துவிட்டால் இரு மாதங்களில் துளிர்த்து பூக்கள் பூக்கத் துவங்கும் என்றனர் . பூக்களுக்கு நிரந்த விலை கிடைக்க டி.குமாரமங்கலம் பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு உருவாக்கினால் விவசாயிகள் பயன்பெறுவதுடன், பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

## வெல்லம் விலை வீழ்ச்சி: உற்பத்தியாளர்கள் கவலை

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்டம், முத்தனூர், கவுண்டன்புதூர், நடையனூர், கரைப்பாளையம், நொய்யல், சேமங்கி, கொளத்துப்பாளையம், வேட்டமங்கலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் கரும்பு பியிரிட்டுள்ளனர். கரணை பதித்தவுடன், புகளூரில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வெட்டிச் செல்வதற்கு பதிவு செய்கின்றனர். பதிவு செய்யாத விவசாயிகள், கரும்பு விளைந்தவுடன் பல்வேறு பகுதிகளில் உள்ள வெல்லம் தயாரிக்கும் ஆலைகளுக்கு, டன் ஒன்றுக்கு, 2,100 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். இங்கு தயாரிக்கப்படும் வெல்லம் நன்கு உலர வைத்து சாக்குகளில், 30 கிலோ கொண்ட சிப்பங்களாக்கப்படுகிறது. வெல்ல சிப்பங்களை வியாபாரிகள் வாங்கி, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மஹாராஷ்டிரா, உத்ராஞ்சல், உத்திரப்பிரதேசம், சண்டிகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரத்தில், 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம், ஒரு சிப்பம், 1,100 ரூபாய்க்கும், 30 கிலோ கொண்ட அச்சு வெல்லம் ஒரு சிப்பம், 1,150 ரூபாய்க்கும் விற்கப்பட்டது இந்த வாரம் வியாபாரிகள், 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம் உருண்டை வெல்லம், 1,050 ரூபாய்க்கும், 30 கிலோ கொண்ட அச்சு வெல்லம், 1,050க்கும் வாங்கிச் சென்றனர். வெளி மாநிலங்களுக்கு அனுப்பும் வெல்லம் அளவு குறைந்து, விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

## விவசாய களமான ரோடுகள்

கமுதி : கமுதியில் கம்பு, சோளம் மற்றும் வைக்கோல்களை ரோட்டில் ஒரு அடிக்கு மேல் உயரத்திற்கு ரோடு முழுவதும் பரப்பி காய வைக்கின்றனர். வாகனங்களின் அடிப்பகுதியில் சிக்கும் கூலங்களால் கார்கள் பழுதடைந்து விடுகிறது. அதே போல் கம்பு, சோளத்தை புடைக்கும் போது பரவும் தூசு, டூவீலர்

ஓட்டிகளின் கண்களில் விழுந்து விபத்தில் சிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே ரோட்டை விளைப்பொருட்கள் களமாக பயன்படுத்துவதை விவசாயிகள் தவிர்க்கும் வகையில், விளைகளம் அமைக்க வேளாண் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பா.ஜ., விவசாய அணி கூட்டம்

ராமநாதபுரம் : ராமநாதபுரத்தில், பா.ஜ., விவசாய அணி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். மாவட்ட பொதுச் செயலாளர் சேகர் முன்னிலை வகித்தார். வைகை அணையின் நீர் திறப்பின்போது ராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு முதல்போக உரிமையை நிலை நாட்ட வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மாநில மீனவரணி பொறுப்பாளர் காந்தி, மாவட்ட இளைஞரணி தலைவர் மதுரைவீன் பங்கேற்றனர். மாவட்ட செயலாளர் மாரிமுத்து நன்றி கூறினார்.

## வறட்சியால் சாகுபடி பரப்பு குறைவு கி.கிரியில் தக்காளி விலை உயர்வு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக தக்காளி சாகுபடி பரப்பு குறைந்ததின் காரணமாக, தக்காளி விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலவும் சீதோஷ்ண நிலை, காய்கறி பயிர்கள் சாகுபடிக்கு உகந்ததாக உள்ளது. இதனால், அதிக பரப்பில், காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டு, வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களுக்கு, ஏற்றுமதி செய்யப்படுகிறது. குறிப்பாக, மாவட்டத்தில், ராயக்கோட்டை, தளி, ஓசூர், சூளகிரி, தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம், பேரிகை, பாகலூர், கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி சுற்றுவட்டார பகுதியில், ஆண்டு முழுவதும், 10 ஆயிரம் ஹெக்டேரில், தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் தக்காளி, ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி தக்காளி சந்தைகள் மூலம் சென்னை, திருச்சி, சேலம், மதுரை, கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில், வழக்கமாக ஜூன், ஜூலை மாதங்களில், மாவட்டத்தில், 6,000 ஹெக்டேரில், தாக்காளி சாகுபடி இருக்கும். ஆனால், இந்த ஆண்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சி காரணமாக, நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டதால், தற்போது, 2,000 ஹெக்டேரில் மட்டுமே, தக்காளி சாகுபடி உள்ளது. அதனால், தக்காளி வரத்து குறைந்து, விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன், ஒரு கிலோ தக்காளி, 20 ரூபாயாக இருந்தது. இது படிப்படியாக உயர்ந்து,

நேற்றைய நிலவரப்படி, மாவட்டத்தில், ஒரு கிலோ தக்காளி, 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தக்காளி வரத்து அதிகரிக்கும் வரை, தக்காளி விலையில், பெரிய அளவில் மாற்றம் இருக்காது என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

## செவட்டை நோய் தாக்காத திராட்சை ரகம் அறிமுகம்

கம்பம் : திராட்சை விவசாயிகளுக்கு தீராத தலைவலியை ஏற்படுத்திய செவட்டை மற்றும் சாம்பல் நோய் தாக்காத புதிய திராட்சை ரகம் ஒன்றை, திராட்சை ஆராய்ச்சி நிலையம் அறிமுகம் செய்துள்ளது. கம்பம் பகுதியில் திராட்சை அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. பிற பகுதிகளில் ஆண்டிற்கு ஒரு அறுவடை நடக்கும் போது,கம்பம் பள்ளத்தாக்கில் மட்டும் ஆண்டிற்கு மூன்று அறுவடை மேற்கொள்ளப்படுகிறது.இப்பகுதியில் பன்னீர் திராட்சையே பிரதானமாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. திராட்சையை பொறுத்தவரை விவசாயிகளுக்கு தீராத தலைவலியாக, செவட்டை மற்றும் சாம்பல் நோய் தாக்குதல் இருந்து வருகிறது. பனி காலம் மற்றும் மழை காலங்களில் செவட்டை மற்றும் சாம்பல் நோய் தாக்கி மகசூல் கடுமையாக பாதிக்கும். விவசாயிகளும் எவ்வளவோ முயற்சி செய்தும்,செவட்டை தாக்குதலை கட்டுப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் கம்பம் அருகே அமைக்கப்பட்டுள்ள திராட்சை ஆராய்ச்சி நிலையம் கடந்த நான்கு சீசன்களில் தீவிரமாக முயற்சி செய்து செவட்டை மற்றும் சாம்பல் நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்க புதிய ரகம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.திராட்சை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பார்த்திபன் கூறியதாவது: புனேயில் உள்ள தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து ஏ - 18 - 3 என்ற ரகத்தை வாங்கி வந்து நான்கு சீசன்களில் சோதனை செய்து பார்த்தோம். தற்போது நமது பகுதியில் சாம்பல் மற்றும் செவட்டை தாக்காமல் இருக்க இதுவே சரியான ரகமாகும். ஒரு கொடியில் 150 முதல் 200 கொத்துக்கள் வரை உள்ளன. மற்ற ரகங்களில் 50 முதல் 70 கொத்துக்கள் மட்டுமே இருக்கும். இலைகள் அகலமாகவும், கரும்பச்சை நிறத்திலும் இருக்கும். விவசாயிகளுக்க ஏற்ற ரகம், என்றார். விவசாயிகளின் நீண்ட நாள் பிரச்னையாக இருந்த செவட்டை மற்றும் சாம்பல் நோய் தாக்காத ரகம் அறிமுகம் செய்திருப்பது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## விவசாய கடன் வழங்கும் முகாம்

அரியலூர்: அரியலூர் பஞ்சாப் நேஷனல் பாங்க் சார்பில், விவசாயிகளுக்கு கடன் வழங்கும் முகாம் நடந்தது. முகாமுக்கு, வங்கி கிளை மேலாளர் முரளி தலைமை வகித்தார். விவசாய அலுவலர் கன்ஷிராம் வரவேற்றார். அரியலூர் வட்டாரத்துக்குட்பட்ட, 65 விவசாயிகளுக்கு, தொழில் கடனுக்கான காசோலைகளை, பஞ்சாப் நேஷனல் பாங்க், திருச்சி மண்டல மேலாளர் தாமோதரன் வழங்கி பேசினார். முகாமில் பாளையக்குடி முத்தமிழ்வீரன், வக்கீல்கள் மனோகரன், திருமாவளவன், வேளான் பிரதிநிதிகள் விஜயகுமார், அட்சயகுமார் மற்றும் விவசாயிகள் பலரும் பங்கேற்றனர்.

## கால்நடை மருத்துவ முகாம்

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த மருதூரில், ரோட்டரி சங்கம், தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை சார்பில், கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.
ரோட்டரி சங்கத் தலைவர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். செயலாளர் அமிர்தலிங்கம் முன்னிலை வகித்தார். சண்முகா உதவி தொடக்கப்பள்ளி, ஓ.என்.ஜி.சி., அங்கான்வாடி, கூழியதேவன் அங்கன்வாடி ஆகிய இடங்களில் நடந்த மருத்துவ முகாமை, ரோட்டரி துணை கவர்னர் ராஜகோபால் துவக்கி வைத்தார். முகாமில், 196 மாடுகள், 154 ஆடுகளுக்கும் கால்நடை உதவி மருத்துவர்கள் மீனாட்சிசுந்தரம், மஞ்சுளா, கால்நடை ஆய்வாளர் நாவலன் ஆகியோர் சிகிச்சை அளித்தனர். கால்நடை வளர்ப்பு விவசாயிகளுக்கு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது. சாசனத் தலைவர் பஞ்சாபகேசன் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கர்நாடகாவில் மழை குறைந்தது: மேட்டூருக்கு நீர்வரத்து சரிகிறது




மேட்டூர்: கர்நாடக மாநிலத்தின் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால், மேட்டூர் அணைக்கு வரும் காவிரி நீர் வரத்து படிப்படியாக குறைந்து வருகிறது கர்நாடக மாநிலத்தில் கடந்த 20 நாட்களுககும் மேலாக கனமழை பெய்து வந்தது. இதனால் அங்குள்ள உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. அணைகளின் பாதுகாப்பு கருதி உபரிநீர் வெளியேற்றப்பட்டது. இந்த உபரிநீர் கடந்த 18ம் தேதி மேட்டூர் அணைகது வந்து சேர்ந்தது. நேற்று காலை மேட்டூர் அணைக்கு அதிகபட்சமாக வினாடிககு 40,215 கனஅடியாக தண்ணீர் வந்தது. இந்நிலையில், தற்போது கர்நாடக மாநிலத்தில் மழை குறைந்துள்ளதால் அங்குள்ள அணைகளிலிருநது வெளியேற்றப்படும் நீரின் அளவும் குறைககப்பட்டுள்ளது. இதனால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நேற்று காலை வினாடிககு 32,898 கனஅடியாக இருந்தது. குடிநீர் தேவை மற்றும் ஆடிப் பெருககு

பண்டிகைககாக அணையிலிருநது வினாடிககு 6,799 கனஅடி வீதம் தண்ணீர் திறககப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் 80.09 அடியாக உள்ளது. நீர் இருப்பு 42.04 டி.எம்.சியாக உள்ளது. ஒகேனக்கல் பகுதியில் விநாடிக்கு 34 ஆயிரம் கனஅடியாக உள்ளது. கர்நாடகத்தில் வரத்து குறைய தொடங்கியதையடுத்து அடுத்து வரும் நாட்களில் ஒகேனக்கல்லுக்கு வரும் நீர்வரத்து சரியும். ஆடிப்பெருக்கு தினத்தில் அருவிகளில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கப்படும் வாய்ப்பு உள்ளது.

**விவசாயிகளின் பை நிறைய வேண்டும் அறிவியல் தொழில்நுட்பத்தை வயலுக்கு எடுத்து செல்லுங்கள் விஞ்ஞானிகளுக்கு : நரேந்திர மோடி வேண்டுகோள்**

புதுடெல்லி: உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வருமானத்தை பெருக்க, அறிவியல் தொழில்நுட்பத்தை வயலுக்கு கொண்டு செல்லுங்கள் என வேளாண் விஞ்ஞானிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் அமைப்பின் 86ம் ஆண்டு விழா டெல்லியில் நேற்று நடந்தது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: சமையல் எண்ணெய், பருப்பு வகைகளை நம் நாடு அதிகளவில் இறக்குமதி செய்வது கவலை அளிக்கிறது. நமது நாட்டின் வேளாண் உற்பத்தியை பெருக்க விஞ்ஞானிகள் உதவ வேண்டும். நாம் இரண்டு விஷயங்களை நிரூபிக்க வேண்டும். முதலாவது, நம் விவசாயிகளால் இந்த நாட்டுக்கே, உலகத்துக்கே உணவு அளிக்க முடியும். இரண்டாவது, விவசாயத்தால், விவசாயிகளின் பை நிறைய வேண்டும். விவசாயிகளுக்கு போதிய வருமானம் கிடைக்கவில்லை என்றால், அவர் களால் விவசாயத்தில் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாது. இதை மையமாக வைத்து நாம் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுக்க வேண்டும். அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப நாம் விவசாய உற்பத்தியை பெருக்கும் வகையில், அறிவியல் தொழில்நுட்பங்களை வயலுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். தரத்தில் எந்த குறைபாடும் இல்லாமல் பயிர் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் மீன் வளம் முக்கிய பங்கு வகிக்கிறது. பசுமை புரட்சி, வெண்மை புரட்சி போல், மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து

நாம் நீலப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். சீனாவை போல் மூலிகை மருத்துகள் உற்பத்தியில் நமது விஞ்ஞானிகளும் கவனம் செலுத்த வேண்டும். நாட்டில் உள்ள வேளாண் பல்கலைக்கழகங்கள், சொந்தமாக ரேடியோ நிலையங்களை அமைத்து விவசாயிகளுக்கு தேவையான தகவல்களை ஒலிபரப்ப வேண்டும். பருவநிலையில் மாற்றம் ஏற்படுவதால் மழைநீர் சேகரிப்பு திட்டம் மூலம் நீரை சேமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் 100வது ஆண்டு தினத்தை கொண்டாடும் போது சில இலக்குகளை அடைய இப்போதே திட்டம் வகுக்க வேண்டும். கடந்த 86 ஆண்டுகள் செய்ததை விட, அடுத்த 14 ஆண்டுகளில் இந்த வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் அதிக சாதனைகள் படைக்க வேண்டும். இவ்வாறு நரேந்திர மோடி பேசினார். நாம் 2 விஷயங்களை நிரூபிக்க வேண்டும். முதலாவது, நம் விவசாயிகளால் இந்த நாட்டுக்கே, உலகத்துக்கே உணவு அளிக்க முடியும். இரண்டாவது, விவசாயத்தால், நமது விவசாயிகளின் வருவாய் பெருக வேண்டும். விவசாயிகளுக்கு போதிய வருமானம் கிடைக்கவில்லை என்றால், அவர்களால் விவசாயத்தில் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாது. இதை மையமாக வைத்து நாம் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுக்க வேண்டும்.

## தரமற்ற விதைகளால் எள் சாகுபடி பாதிப்பு விவசாயிகள் ஏமாற்றம்

போச்சம்பள்ளி, : சாகுபடி செய்யப்பட்ட எள் பயிர் நன்கு வளர்ந்தும் பூ பூக்கவில்லை. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். போச்சம்பள்ளி மத்தூர் சுற்று வட்டாரப்பகுதியில் விவசாயிகள் கடந்த 2 மாதங்களுக்கு முன் பெய்த கோடை மழையை நம்பி, தங்கள் நிலங்களில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலபரப்பில் எள் சாகுபடி செய்தனர். ஒரு ஏக்கர் நிலத்தில் எள் சாகுபடி செய்ய விதை ,உழவு, மற்றும் உரங்கள் என மொத்தம் 5.500 ரூபாய் வரை செலவாகிறது. பயிரிட்ட 40 நாட்களில் வெள்ளை நிறத்தில் பூ பூக்கத் தொடங்கிவிடும். ஆனால், எள் பயிரிட்டு சுமார் 60 நாட்கள் ஆகியும் எள் செடியில் பூக்கவில்லை. குறிப்பாக சிவம்பட்டி, பாளேத்தோட்டம், பகுதியில் எள் செடி பச்சைப் பசேல் என்று செழிப்பாக வளர்ந்திருந்தது. ஆனால், பூக்கள் பூக்காமல் உள்ளன. குறிப்பிட்ட நாட்களுக்கு பின்னர் எள் செடிகள் பூக்காததால் விவசாயிகள்

ஏமாற்றமடைந்தனர். குறிப்பிட்ட பருவத்தில் எள் செடிகள் பூத்திருந்தால், ஏக்கருக்கு குறைந்த பட்சம் 350 கிலோ எள் மகசூல் கிடைத்திருக்கும். இதன் மூலம் 25 ஆயிரம் ரூபாய் வருவாய் பெற்றிருக்கலாம். ஆனால், எள் செடி பூக்காததால் ஏக்கருக்கு செலவு மற்றும் மகசூல் சேர்த்து மொத்தம் 30 ஆயிரம் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், சந்தையில் எள் விதைகள் வாங்கி விதைத்தோம். அந்த விதைகள் தரமற்றதாக இருந்ததால், எள் செடிகள் பூக்கவில்லை. இதனால் பல ஆயிரம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றனர்.

**திருச்செந்தூரில் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் ரூ.22.70 லட்சம் உதவித்தொகை**

திருச்செந்தூர், : திருச்செந்தூர் தாலுகாவில் உள்ள 444 பயனாளிகளுக்கு உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 22 லட்சத்து 72 ஆயிரத்து 900 ரூபாயை அமைச்சர் சண்முகநாதன் வழங்கினார். முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் திருச்செந்தூர் தாலுகா விற்குட்பட்ட பயனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கும் விழா தாலுகா அலுவலகத்தில் நடந்தது. விழாவிற்கு கலெக்டர் ரவிக்குமார் தலைமை வகித்தார். ஆர்டிஓ தமிழ்ராஜன் வரவேற்றார். விழா வில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 35 பேருக்கு இயற்கை மரண உதவித் தொகை, 116 பேருக்கு திருமண உதவி தொகை, 245 பேருக்கு கல்வி உதவி தொகை, 40 பேருக்கு மருத்துவ உதவி தொகை என மொத்தம் 444 பயனாளிகளுக்கு ரூ.22 லட்சத்து 72 ஆயிரத்து 900க்கான காசோ லையை அமைச்சர் சண்முகநாதன் வழங்கினார். இதில் தாசில்தார் நல்லசிவன், வட்ட வழங்கல் அலுவலர் ரகு, துணை தாசில்தார்கள் ராதாகிருஷ்ணன், சுவாமிநாதன், வருவாய் ஆய்வாளர் பாலசுந்தரம், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் மணத்தி ரவிக்குமார், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செய லாளர் செல்லத்துரை, திருச்செந்தூர் பேரூராட்சி தலைவர் சுரேஷ்பாபு, ஒன்றிய அதிமுக செய லாளர் அமலிராஜன், கோயில் தக்கார் கோட்டை மணிகண்டன், மாவட்ட அதிமுக பொருளாளர் ஜெபமாலை, நகர அதிமுக செயலாளர் மகேந்திரன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் வடிவேல், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் கணே சன், மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலா ளர் ராமச்சந்திரன், ஒன்றிய இளம் பாசறை செயலாளர்

வினோத் கலந்து கொண் டனர். சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் இம்மானுவேல் ஜெயக்குமார் நன்றி கூறினார்.

**சென்னையில் குடிநீர் பிரச்னை தீர்க்க கிருஷ்ணா நதி நீர் அடுத்த மாதம் திறப்பு**

சென்னை, : சென்னை நகரின் குடிநீர் தேவையை சமாளிக்க அடுத்த மாதம் கிருஷ்ணா நதியில் இருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது. தெலுங்கு கங்கை கால்வாய் திட்டத்தின் மூலம் கிருஷ்ணா நதி நீர் ஆந்திராவிலிருந்து சென்னை வந்து கொண்டு இருக்கிறது. சென்னை நகரின் குடிநீர் தேவையை இது பெருமளவு தீர்த்து வைக்கிறது. கடந்த ஒரு மாதமாக கிருஷ்ணா நதி நீர் சென்னை வராத நிலை இருந்தது. இதனால் சென்னையில் உள்ள குடிநீர் ஏரிகளின் நீர்மட்டம் வேகமாக குறைந்தது. சென்னைக்கு தண்ணீரை அனுப்பி வந்த வீராணம் ஏரியும் வறண்ட நிலையை எட்டியுள்ளது. அங்கு தற்போது 2500 மில்லியன் கன அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. இந்நிலையில், வரும் ஆகஸ்ட் மாதம் கிருஷ்ணா நதி தண்ணீர் சென்னை வரும் என்ற தகவல் வந்துள்ளது. இதனால் சென்னையின் குடிநீர் தேவை பெருமளவு நிறைவேற்றப்படும். இதுதொடர்பாக, கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நதி நீரை தமிழகத்திற்கு திறந்து விடுமாறு ஏற்கனவே ஆந்திர அரசுக்கு தமிழக அரசு கடிதம் மூலம்வேண்டுகோள்விடுத்திருந்தது. கிருஷ்ணா நீர் தமிழகம் வருவது குறித்து நீர்வளத் துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா நீர் பூண்டி நீர்த்தேக்கம் வந்தடைய 4 நாட்கள் ஆகும். வினாடிக்கு 400 முதல் 500 கனஅடி தண்ணீர் தமிழகத்திற்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார். தண்ணீர் இருப்பு குறைவு காரணமாக ஏற்கனவே கடந்த மே மாதம் சென்னை நகருக்கு சப்ளை செய்யப்பட்ட குடிநீர் 810 மில்லியன் லிட்டரிலிருந்து 610 மில்லியன் லிட்டராக குறைக்கப்பட்டது. மழை மூலம் போதிய தண்ணீர் கிடைக்காததால் தற்போது சென்னை மாநகர குடிநீர் தேவைக்கு கிருஷ்ணா நதி நீரை நம்பி இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே கிருஷ்ணா நதி நீரை தேக்கி வைக்க வசதியாக பூண்டியிலிருந்து செம்பரம்பாக்கம் ஏரி வரை உள்ள 25 கி.மீ நீள கால்வாய் பகுதி சீரமைக்கப்பட்டு வருகிறது. இதுதவிர, தண்ணீரை தேக்கி வைப்பதற்காக செம்பரம்பாக்கம் ஏரி அருகில் நேமம் நீர்த்தேக்கத்தை சீரமைக்கும் பணி வேகமாக நடந்து வருகிறது. 1000 ஹெக்டேர்

பரப்பு கொண்ட இந்த புதிய நீர்த்தேக்கத்தில் கூடுதலாக 257 மில்லியன் கன அடியிலிருந்து 577 மில்லியன் கன அடி வரை தண்ணீரை தேக்கி வைக்க முடியும்.இதன் மூலமும் சென்னை நகரின் 15 நாள் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

## நெசவாளர், விவசாய கடனை தள்ளுபடி செய்ய கோரிக்கை

காஞ்சிபுரம், : விவசாய கடனை தள்ளுபடி செய்யவேண்டும் என இந்திய தேசிய மக்கள் கழகத்தினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.இந்திய தேசிய மக்கள் கழகத்தின் காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பு கூட்டம் காஞ்சிபுரத்தில் நேற்று முன்தினம் நடந்தது. மாநில பொருளாளர் காஞ்சி சரவணன் தலைமை வகித்தார். மாநில அமைப்பாளர் சாக்கை சிவகுகன் வரவேற்றார். தலைவர் நேருதாசன், சட்ட ஆலோசகர் தென்பாண்டியன் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக விஷ்வ ஜனசக்தி கட்சி தலைவர் சதாசிவம், பொதுச்செயலாளர் சம்பத், தியாகி விஸ்வநாததாஸ் சங்க பொதுச்செயலாளர் சேகர், தலைமை நிலைய செயலாளர் நீலகண்டன், மாநில ஆட்சிமன்ற குழு உறுப்பினர்கள் சுப்பிரமணியன், ராஜாங்கம், நெசவாளர் சங்க நிர்வாகி நீலகண்டன், பொதுச்செயலாளர் செஞ்சி கண்ணன் மற்றும் நிர்வாகிகள் அய்யாபிள்ளை, பாலகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில், கிராமத்தில் மாத வருமானம் ரூ20,000, நகரத்தில் ரூ30,000, மாநகரத்தில் ரூ40,000 பெறுவோருக்கு அரசு வறுமை அட்டை வழங்க வேண்டும், நகர பகுதியில் குடியிருப்போர் நலன் கருதி வீட்டு வாடகையை முறைப்படுத்துவது, பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பதை நிறுத்துவது, நெசவாளர், விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும், மதுவை ஒழிப்பது, ஏழைகளுக்கு உயர் மருத்துவ சிகிச்சை அளிக்க தாலுகா தோறும் மருத்துவமனை அமைக்கவேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிர்வாகிகள் வெங்கட சுப்பிரமணியன், சேகர், தினேஷ் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஜெயசுதா நன்றி கூறினார்.

## வறட்சியை கருத்தில் கொண்டு மழைக்காலத்தில் லட்சம் மரங்கள் நடுவதற்கு விவசாயிகள் கோரிக்கை

சேலம், : சேலம் மாவட்டத்தில் வறட்சியை கருத்தில் கொண்டு மழைக்காலத்தில் லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். சேலம் மாவட்டத்தில் நடப்பாண்டிலும் வறட்சி தொடர்கிறது. தென்மேற்கு பருவமழை எதிர்பார்க்கும் அளவுக்கு பெய்யுமா? என்ற கவலையில் விவசாயிகள் தவித்து வருகின்றனர். மரங்களை அழித்தது, மழைவளம் குறைந்ததற்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. எனவே நடப்பாண்டு வறட்சியை கருத்தில் கொண்டு மழைக்காலத்தில் மாவட்டம் முழுவதும் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு, அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.இது குறித்து தமிழ்நாடு மரவள்ளி கிழங்கு உற்பத்தியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கோவிந்தசாமி, தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ளமனுவில்கூறியிருப்பதாவது:

சேலம் மாவட்டம் முழுவதும் ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள், தரிசுநிலங்கள் மற்றும் வனத்துறைக்கு சொந்தமான நிலங்கள் ஏராளமாக உள்ளது. இந்த நிலங்களில் வருவாய் தரக்கூடிய ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடலாம். இதனால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதோடு வறட்சியும் தவிர்க்கப்படும். மேலும் அரசுக்கும் நல்ல வருவாய் கிடைக்கும். அக்டோபர், நவம்பர் மாதங்கள் மழைக்காலம் என்பதால், அதனை கருத்தில் கொண்டு லட்சம் மரக்கன்றுகளை நடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வாழப்பாடியில் விவசாயிகள் நல சங்க கூட்டம்

வாழப்பாடி, : சேலம் மாவட்டம் வாழப்பாடியில் என்.எச் 68 திட்டத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நலச்சங்க கூட்டம் நேற்று நடந்தது. தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். இதில் சங்க நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. உயர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கை விரைவாக நடத்துவது எனவும்,

என்.எச் 47, 7ல் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பால் உற்பத்தியாளர்கள் சங்கம், கரும்பு, மஞ்சள், மரவள்ளி உற்பத்தியாளர்கள் சங்கம் ஆகிய சங்கங்களுடன் இணைந்து செயல்படுவது, வாழப்பாடி தாலுகா உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பயனாளிகளுக்கு சேர வேண்டிய பல லட்சத்தை கையாடல் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவது என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சரபங்கா ஆறு இணைப்பு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் பாமக வலியுறுத்தல்**

ஓமலூர், : காவிரி உபரிநீரை சரபங்கா ஆற்றுடன் இணைக்கும் திட்டத்தை அரசு அறிவித்தபடி நிறைவேற்ற வேண்டும் என்று பாமக வலியுறுத்தி உள்ளது. இதுகுறித்து பாமக மாநில துணை பொது செயலாளர் தமிழரசு விடுத்துள்ள அறிக்கை: காவிரி உபரி நீரை சேலம் மாவட்ட மக்கள் பயனடையும் வகையில் சேலம் மாவட்டத்தில் உள்ள சரபங்கா ஆறு, திருமணி முத்தாறு, வசிஷ்ட நதியில் இணைக்கக்கோரி வலியுறுத்தி வந்தோம். மேலும் டாக்டர் ராமதாஸ் தலைமையில் 50ஆயிரம் பேர் சேலத்தில் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதையடுத்து 2010-11ம் ஆண்டு கவர்னர் உரையில் காவிரி உபரிநீர் திட்டம், கொல்லிமலை ஐயாறு திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்து, திட்டம் அப்போதைய தமிழக அரசால் அனுமதிக்கப்பட்டது. அதை தொடர்ந்து தற்போதைய அரசு அறிவித்துள்ள திட்டத்தில் காவிரி மற்றும் சரபங்கா ஆறு இணைப்பு திட்டம் நாமக்கல் மாவட்டத்துடன் தொடர்புடையது என தி1350 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனிடையே, தி50லட்சத்தில் பொதுப்பணித்துறை நீர் ஆதார அமைப்பு திட்டத்தை ஆய்வுகள் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இத்திட்டம் மேட்டூரில் இருந்து எடப்பாடி, ராசிபுரம் என திசைமாறி பணி ஆய்வு நடப்பதாக அறிந்து மீண்டும் பாமக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளது. இது குறித்து சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் காவிரி உபரி நீர் திட்டத்தை ஏற்காடு மலையில் இருந்து டேனிஷ்பேட்டை, பண்ணப்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி, காடையாம்பட்டி, ஓமலூர், எடப்பாடி, பூலாம்பட்டி வரை சரபங்கா ஆறு செல்கிறது. எனவே காவிரி உபரிநீர் மேச்சேரி வழியாக சரபங்கா ஆறு, அதனை தொடர்ந்து சேலம் திருமணி முத்தாறு, இதனை தொடர்ந்து

ஆத்தூர் வசிஷ்ட நதியில் இணைக்க வேண்டும். அவ்வாறு இணைத்தால் மட்டுமே சேலம் மாவட்டம் முழுவதும் விவசாயிகள் பயனடைவார்கள், மாவட்டத்தில் குடிநீர் பிரச்னையும் தீர்க்கப்படும் என்று மனு கொடுக்கப்பட்டது. ஆனால் நடவடிக்கை இல்லை. எனவே இந்த விஷயத்தில் அரசு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**கோழிப்பண்ணை அமைக்க 240 பேருக்கு மானியம் கால்நடை பராமரிப்புத்துறை இலக்கு**

கரூர், : கோழிப்பண்ணை அமைப்பதற்காக 240 பேருக்கு மானியம் வழ ங்க கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கரூர் மாவட்டத்தில் விலை யில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் ஆயிரத்து 137 பயனாளிகளுக்கு முதல் ஆண்டிலும், ஆயிரத்து 842 பேருக்கு 2ம் ஆண்டிலும், 3ஆயிரம் பேருக்கு 3ம் ஆண்டிலும் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் மட்டும் வழங்கிய ஆடுகளின் மதிப்பு ரூ.3கோடியே 83லட்சம். இந்நிலையில் தற்போது கோழிப் பண்ணைகள் அமக்க 240 பேருக்கு மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதில் 126 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மீதமு ள்ள பயனாளிகள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இறவை தீவன அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 526ஏக்கரில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு சாகுபடி செய்யப்பட்டுள் ளது. சுமார் ரூ. 63 லட்சம் நிதிஒதுக்கீடு செ ய்யப்பட்டு ஆயிரத்து 252 பேருக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. தே சிய வேளாண் மை அபிவிருத்தி திட்டத் தில் ரூ.12லட் சம் நிதியில் 254பயனாளிக ள் தீவன சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். நீர்தெளிப்ப ன்கள் வழங்குவதற்காக ரூ. 21.27 லட்சம் நிதி ஒதுக் கீடு பெற ப்பட்டு இதுவரை 50 பயனாளிகளுக்கு வழங்கும் ப ணி நடைபெற்று வருகிறது.அசோலா வளர்ப்பு திட்டத்தில் 290 பயனாளிகளுக்கு ரூ.3லட்சத்து 75ஆயிரம் உதவி செய்யப்பட்டுள்ளது. 72சுயஉதவிக் குழு பயனாளிகளுக்கு வெ ள்ளாடுகள் ரூ.30 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள் ளது. நாட்டுக்கோழி வளர் ப்பு திட்டத்திற்காக ரூ.10.50 லட்சம் மதிப்பில் 55 பேரு க்கு கடன் வழங்கப்பட்டுள் ளது.

இத்தகவலை கரூர் மா வட்ட கலெக்டர் ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வெங்கமேடு பெரியகுளத்துப்பாளையம் உழவர் சந்தை வாகன வசதி இல்லாததால் வெறிச்சோடுகிறதுநடவடிக்கை எடுக்க கோரிக்கை**

கரூர்,:கரூர் வெங்கமேடு பெரியகுளத்துப்பாளையத்தில் உள்ள உழவர்சந்தைக்கு அதிகளவு விவசாயிகள் வந்து செல்ல போக்குவரத்து வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் கரூர், வெங்கமேடு, வேலாயுதம்பாளையம், குளித்தலை, பள்ளப்பட்டி ஆகிய 5 இடங்களில் உழவர் சந்தை செயல்படுகின்றன. இதில், கடைசியாக ஏற்படுத்தப்பட்டது வெங்கமேடு உழவர் சந்தையாகும். இந்த உழவர் சந்தை, வெங்கமேடு பெரியகுளத்துப்பாளையத்தில் கடந்த 2011ம் ஆண்டு பிப்ரவரி 26ம்தேதி துவக்கப்பட்டது. சந்தையில் 20 கடைகள் செயல்படுகின்றன. 23 சென்ட் நிலத்தில் இதற்காக வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து இங்கு தினமும் 5 டன் காய்கறிகள் வருகிறது. தினமும் 800ல் இருந்து ஆயிரம் வரையிலான பொதுமக்கள் வந்து செல்கின்றனர். இந்த உழவர் சந்தை காலை 5.30 மணியில் இருந்து 8மணி வரை செயல்படுகிறது. அதன்பிறகு சந்தை வளாகம் வெறிச்சோடி விடுகிறது. வெங்கமேடு உழவர்சந்தைக்கு விவசாயிகள் தங் களின் விளைபொருட்களை கொண்டு வர தேவையான பஸ் வசதி இல்லை. இதனால் அளவு போதிய காய்கறி ரகங்கள் வரத்து இல்லை. இது போன்ற காரணங்களால் உழவர் சந்தை செயல்பாடு மிகவும் மந்தமாகவே உள்ளதாக பொதுமக்கள் கூறுகின்றனர். பெரிய குளத்துப் பாளையத்தில் செயல்படும் உழவர்சந்தைக்கு காய்கறி கொண்டு வரும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதில் முக்கியமாக போதுமான அளவு அரசு பஸ் வந்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது பெரும்பாலான நாட்கள் இந்த உழவர் சந்தையின் சில கடைகள் காலியாகவே இருக்கிறது. இதனால் உழவர்சந்தையின் தரத்தை மேம்படுத்தி அதிகளவு விவசாயிகள் வந்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என எனவும் பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் வெங்கமேட்டில் வாரச் சந்தை

செயல்படுகிறது. அதனால், இந்த நாட்களில் மட்டும் உழவர்சந்தைக்கு வரும் பயனாளிகள் குறைவாக இருக்கும் எனவும், மற்ற நாட்களில் உழவர்சந்தைக்கு மக்கள் வந்துதான் செல்கின்றனர், அனைத்து கடைகளும் செயல்படுகிறது என அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது. கரூரில் செயல்படும் மற்ற உழவர் சந்தைகளுக்கு பொதுமக்களின் ஆதரவு அதிகமாக இருந்து வரும் பட்சத்தில் பெரியகுளத்துப்பாளையத்தில் செயல்படும் இந்த உழவர்சந்தைக்கு மக்களிடையே இன்னும் ஆத ரவு இல்லாமல்தான் உள் ளது. விவசாயிகள் தங்களின் விலைபொருட்களை நேரிடையாக உழவர்சந்தை மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கில்தான் உழவர் சந்தைகள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் நோக்கம் மாறாத வகையில், சந்தை வளாகத்தில் உள்ள அனைத்து கடைகளிலும் வியாபாரிகள் வந்து விளைபொருட்களை தினமும் விற்பனை செய்ய உரிய ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து தர வேண்டும் என அனைத்து தரப்பினர்களும் எதிர்பார்க்கின்றனர்.

**நீர் ஆதாரமாக உள்ள குளம், கண்மாய்களை தூர்வார வேண்டும்விவசாயிகள் எதிர்பார்ப்பு**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு நீர் ஆதாரமாகவும், பொதுமக்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் உள்ள குளம், கண்மாய்களை தூர்வார வேண்டும் என விவசாயிகள், பொதுமக்களின் எதிர்பார்ப்பாய் உள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பல ஆயிரம் ஹெக்டர் நிலங்களில் சாகுபடி செய்து வந்த விவசாயிகள் தற்போது அதிக அளவில் நிலங்களை வீட்டுமனைகளாக விற்பனை செய்துவிட்ட நிலையில் சிலர் விவசாயத்தை இன்னும் நம்பி உள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல், வாழை, கரும்பு வம்பன் பகுதிகளில் பூக்கள் பருவத்துக்கு ஏற்றவாறு விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இந்த கண்மாய்களில் வழக்கமாக ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் மழைநீர் நிரம்பும். இந்த நிலையில் கடந்த 2 ஆண்டுகளில் பருவமழை பொய்த்ததால், குளம் மற்றும் கண்மாய்கள் வறண்டு உள்ளது. இந்த வறண்ட குளம் மற்றும் கண்மாய்களில் குப்பைகள் தேங்குவதால் கண்மாய்களின் மண்வளம் பாதிக்கப்படுவதுடன் சுற்றுப்புறச் சூழலும் மாசுபட்டு அப்பகுதி

முழுவதும் கடும் துர்நாற்றமும் வீசுகின்றது. குளம் மற்றும் கண்மாய்கள் அருகில் வசிக்கும் மக்களுக்கு தொற்று நோய் பரவுதற்கான வாய்ப்பு உள்ளது. மேலும் சிலர் தங்கள் வீட்டு, நிலம் அருகில் உள்ள கண்மாய்களை ஆக்கிரமித்து புற்கள் வளர்க்கின்றனர். சிலர் வெள்ளரி, வெண்டைக்காய், பாகற்காய் என பயிரிட்டு விவசாயமே செய்து வருகின்றனர்.பருவமழை பொய்த்ததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து பல இடங்களில் ஆழ்துளைக் குழாய் தண்ணீரும் கிடைக்காமல் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். பல இடங்களில் நிலத்தடி நீர்மட்டம் அதல பாதாளத்துக்குச் சென்றுவிட்டது. இந்நிலையில் தமிழக அரசு நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வரவுள்ள தென்மேற்கு பருவமழையைப் பயன்படுத்திக்கொள்ள உள்ளது. அதனடிப்படையில் அனைத்து அரசு அலுவலகங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளது. பொதுமக்களும் தங்கள் பங்களிப்புக்கு வீடுகள் தோறும் மழைநீர் சேமிப்பு அமைப்பை சீர் செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளது. இந்நிலையில் நகர் அருகிலும், கிராமப்புறத்தில் உள்ள கண்மாய்களை சீர் செய்யவும் அதிலுள்ள குப்பைகளை அகற்றவும் இதுநாள் வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்மாய்களில் உள்ள குப்பை, சாக்கடைகளை அகற்றி தூர் வாரி விவசாயத்தை காக்கவும், நகரில் உள்ள அலுவலகங்களையும் மழைநீர் சேமிப்பு ஏற்படுத்த முயற்சிக்கும். அதே நேரத்தில் கிராமப்புறங்களில் உள்ள கண்மாய்களையும் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் தற்போதைய எதிர்பார்ப்பாக உள்ளது.

## இறவை ஆடிப்பட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி பயிற்சி, வயல்வெளி ஆய்வுவேளாண் மாணவர்கள் விவசாயிகளுக்கு விளக்கம்

புதுக்கோட்டை, : புதுகை வட்டாரம் திருமலைராயசமுத்திரம் கிராமத்தில் வேளாண் கல்லூரி மாணவர்கள் சார்பில் இறவை ஆடிப்பட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி குறித்து தொழில்நுட்ப பயிற்சியும் வயல்வெளி ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. திருச்சி நவலூர் குட்டப்பட்டு அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரியில் வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் 11 மாணவர்கள் கொண்ட குழுவினர் புதுக்கோட்டை வட்டாரத்தில் நடைபெற்று

வரும் பயிர் சாகுபடி குறித்து களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் களப்பயிற்சியின் ஒரு நிகழ்வாக இறவை ஆடிப்பட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி குறித்து தொழில்நுட்ப பயிற்சியும் வயல்வெளி ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. பயிற்சிக்கு கல்லூரி உதவி பேராசிரியர் குருநாதன் தலைமை வகித்தார். வேளாண் கல்லூரி மாணவர் மோகன் வரவேற்றார். பயிற்சியில் இறவை ஆடிப்பட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி குறித்த தொழில்நுட்ப விபரங்களை வேளாண் மாணவர்கள் விவசாயிகளுக்கு விளக்கி கூறினர். மேலும் இப்பயிற்சியில் இக்கிராமத்தைச் சேர்ந்த அனுபவ விவசாயிகளான முத்துலெட்சுமி, பாண்டியன் ஆகியோரது வயலில் வயல்வெளி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் மாணவர்கள் இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு அறுவடை சார்ந்த தொழில்நுட்பங்களையும், அறுவடைக்குப்பின் மேற்கொள்ளப்படும் தொழில்நுட்பங்களையும் விளக்கினர். பின்னர் மாணவர்கள் விவசாயிகளின் வயலில் மக்காச்சோளம் அறுவடை செய்வதில் ஈடுபட்டனர். இப்பயிற்சியில் மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள் திரளாக கலந்துகொண்டு பயனடைந்தனர். வேளாண் கல்லூரி மாணவர் வெங்கடேஷ் நன்றி கூறினார்.

**கால்நடை மருத்துவ முகாம்**

வேதாரண்யம், : நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா மருதூரில் ரோட்டரி சங்கம், தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை, பஞ்சநதிக்குளம் நடுச்சேத்தி ஊராட்சி மன்றம் சார்பில் 3 இடங்களில் கால்நடை மருத்துவ முகாம் ரோட்டரி சங்கத் தலைவர் சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் அமிர்தலிங்கம் வரவேற்றார். சண்முகா உதவி தொடக்கப்பள்ளி, ஓஎன்ஜிசி அங்கான்வாடி, கூழியதேவன் அங்கன்வாடி ஆகிய இடங்களில் மருத்துவ முகாம் நடந்தது. ரோட்டரி துணை ஆளுநர் ராஜகோபால் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் சாசன தலைவர் பஞ்சாபகேசன், சங்க ஆலோசகர் ஆறுமுகம், ஊராட்சி தலைவர் ரவிச்சந்திரன், துணைத் தலைவர் கருப்பையன் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முகாமில் 196 மாடுகள், 154 ஆடுகளுக்கு மாடுகளுக்கு மலடு நீக்கம் மற்றும் சினை ஊசி, சினை பரிசோதனை, குடற்புழு நீக்கம் போன்ற சிகிச்சை அளிக்கப்பட்டது. கால்நடை

உதவி மருத்துவர்கள் மீனாட்சிசுந்தரம், மஞ்சுளா, கால்நடை ஆய்வாளர் நாவலன் ஆகியோர் பணியில் ஈடுபட்டனர். மேலும் விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. ரோட்டரி சங்க பொருளாளர் உமாபதி நன்றி கூறினார்.

**நாகை ஒன்றியத்தில் 40 குடும்பங்களுக்கு இலவச வெள்ளாடு**

நாகை, : நாகை ஒன்றியம் புதுச்சேரி ஊராட்சியில் தமிழக அரசின் இலவச வெள்ளாடுகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. விழாவிற்கு தலைமை வகித்து மாவட்ட கலெக்டர் முனுசாமி 40 பயனாளிகளுக்கு இலவச வெள்ளாடுகளை வழங்கிபேசும்போது, விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் மாவட்டத்தில் இதுவரை ரூ.6.90 கோடி மதிப்பில் 1,950 பயனாளிகளுக்கு கறவை பசுக்களும், ரூ.17.60 கோடி மதிப்பில் 13,690 குடும்பங்களுக்கு தலா 4 வெள்ளாடுகள் வீதம் 54,706 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர நாட்டுக்கோழி பண்ணை அமைக்க ஒரு பயனாளிக்கு 50 சதவீத மானியத்தில் ரூ.1 லட்சத்து 17 ஆயிரம் மதிப்பில் கோழிக்கொட்டகை, குஞ்சு, தீவனம், உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களை பயன்படுத்தி கிராமப்புற மக்கள் தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று கூறினார். ஆர்.டி.ஓ. சிவப்பிரியா, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல் இணை இயக்குனர் ராஜசேகரன், உதவி இயக்குனர் ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**பிளாட்பார கடைகளில் விற்பனைக்கு வரும் வெளிநாட்டு பழங்கள் இத்தாலி கிவி, அரேபிய பேரீச்சம்பழம்**

நாகர்கோவில், :வெளிநாடுகளில் விளையும் பழங்கள் தற்போது மார்க்கெட்களில் அதிக அளவில் விற்பனைக்கு வர தொடங்கி யுள்ளது. ஆப்பிள், ஆரஞ்ச், சாத்துக்குடி, மாதுளை, மாம்பழம் என்று சீசன் வேளைகளில் ஒவ்வொருவிதமான பழங்களுடன் பிளாட்பார கடைகள் ஆக்ரமிப்பது வழக்கம். சமீப காலமாக ஆந்திராவில் இருந்து வந்த நாவல்பழங்களும் விற்பனையில் சக்கை போடு போட்டது. ஒரு கிலோ ரூ.250 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது வெளிநாட்டு பழங்கள் நாகர்கோவில் பகுதி பிளாட்பார கடைகளில்

விற்பனைக்கு வர தொடங்கியுள்ளன. சற்று பெரிய சப்போட்டா பழத்தை போன்று காணப்படும் இத்தாலி, நியூசிலாந்து, சிலி, கிரீஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளில் விளைகின்ற பழ வகைகளில் ஒன்றான கிவி பழங்களும் விற்பனைக்கு வந்துள்ளது. ஒரு பழம் ரூ.60க்கு விற்பனை செய்கின்றனர். தமிழில் இதனை பசலிப்பழம் என்கின்றனர். மருத்துவ குணங்கள் நிறைந்த இந்த பழத்தில் வைட்டமின் ஏ, சி, இ அதிகம் இருப்பதாக கூறப்படுகிறது. ராஜஸ்தான் பேரீச்சம் பழம் சிகப்பு கலரில் விற்பனை செய்யப்படுகிறது. இதன் விலை ஒரு கிலோ ரூ.200 ஆகும். சட்டீஸ்கர் மாநில பகுதிகளில் இருந்து பாக்கெட்டில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வருகின்ற மஞ்சள் நிறத்திலான ஒரு வகை பேரீச்சம்பழம் 600 கிராம் எடை கொண்ட பெட்டி ரூ.120க்கு விற்பனை செய்யப்படுகிறது. கேரள மற்றும் குமரி மாவட்ட எல்லைப்பகுதிகளில் உள்ளதை போன்று காஷ்மீர் ரம்பூட்டன் பழங்கள் அரைகிலோ ரூ.180க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது போன்று இளம்சிகப்பு வண்ணத்தில் அரேபிய பேரீச்சம் பழங்கள் 500 கிராம் பெட்டி ரூ.180க்கு விற்பனை செய்யப்படுகிறது. சிறிய அளவிலான சப்போட்ட வடிவிலான ரிச் பழங்கள் 250 கிராம் ரூ.150க்கு விற்பனை செய்யப்படுகிறது. பல வடிவங்களில் கண்ணை கவரும் நிறங்களில் விற்பனைக்கு வரும் பழங்களை பொதுமக்களும் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

**காய்கறி விலையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் மகளிர் நுகர்வோர் பாதுகாப்பு மையம் வலியுறுத்தல்**

நாகர்கோவில், : நாகர்கோவில் மகளிர் நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் 10வது பொதுக்குழுக் கூட்டம் ஓய்வு பெற்ற அலுவலர் சங்க கட்டிடத்தில் நடந்தது. கூட்டத்திற்கு தலைவர் டாக்டர் சுவர்ணலதா தலைமை வகித்தார். செயலாளர் டாக்டர் ஜாஸ்மின் ஆசிர் வரவேற்றார். பொருளாளர் ஜெசிந்தாள் ஆண்டறிக்கை வாசித்தார். பெட்காட் பேரமைப்பின் தலைவர் டாக்டர் பிரபாகர், பொருளாளர் செல்வராஜ், துணைத்தலைவர் வெங்கடாச்சலம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு பேசினர். கூட்டத்தில் விலைவாசி உயர்வை, குறிப்பாக காய்கறி விலையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்திலுள்ள அனைத்து சாலைகளையும் சீரமைக்க வேண்டும்.

போக்குவரத்துக்குத் தகுதியில்லாத அரசுப் பேருந்துகளை அனுமதிக்கக்கூடாது என்று வட்டாரப்போக்குவரத்து அலுவலரை கேட்டுக்கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் பெட்காட் பேரமைப்பின் பொருளாளர் செல்வராஜ், துணைத்தலைவர் வெங்கடாச்சலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிர்வாகக்குழு உறுப்பினர்கள் லால்மோகன், பீர்முகமது, ஸ்ரீராம், ஷோபா, டாக்டர் அம்பிகாதேவி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**மழை இல்லாததால் பீர்க்கங்காய், புடலங்காய் விலை உயர்வு கிலோ ரூ30 முதல் ரூ40க்கு விற்பனை**

சேலம், : மழை இல்லாததால் பீர்க்கங்காய், புடலங்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விலையும் உயர்ந்துள்ளது. தமிழகத்தில் பரவலாக பீர்க்கங்காய், புடலங்காய் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் குறிப்பாக மேச்சேரி, ஆத்தூர், தலைவாசல், மல்லூர், வாழப்பாடி, ஓமலூர், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம், அரூர், திருச்செங்கோடு, பரமத்திவேலூர் உள்ளிட்ட பகுதிகளில் பீர்க்கங்காய், புடலங்காய் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதியில் இருந்து தமிழகத்தின் பல பகுதிகளிலும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. தற்போது மழை இல்லாததால் பீர்க்கங்காய், புடலங்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலங்களுக்கு சீரான முறையில் தண்ணீர் விடமுடியவில்லை. இதனால் இரு காய்களின் விளைச்சலும் பாதிக்கப் பட்டுள்ளதால்,விலை உயர்ந்து வருகிறது. இது குறித்து சேலம் காய்கறி வியாபாரிகள்கூறியதாவது: பீர்க்கங்காய், புடலங்காய் எப்போதும் விலை ஒரே சீராக தான் இருக்கும். கடந்த 5 மாதமாக இருந்த காய்களும் கிலோ ரூ20 என விற்பனை செய்யப்பட்டு வந்தன. வழக்கமாக இம்மாதத்தில் பருவ மழை பெய்யும். இந்த பருவ மழை நம்பிதான் விதைகள் விதைக்கப்படும். மழை வருவதற்கும், செடியில் பூ பூத்து காய்கள் விடுவதற்கும் சரியான நேரம் இது. இந்த நேரத்தில் தண்ணீர் இல்லாமல் செடிகள் காய்ந்து வருகின்றன. இதனால் இரு காய்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டு வரத்து குறைந்துள்ளது. கிலோ ரூ20 விற்ற நிலையில், விலை படிப்படியாக உயர்ந்து தற்போது ஒரு கிலோ பீர்க்கங்காய், புடலங்காய் ரூ30 முதல் ரூ40 என விற்பனை செய்து வருகிறோம். இவ்வாறு காய்கறி வியாபாரிகள் கூறினர்.

**ரம்ஜான் பண்டிகை எதிரொலி ஆடு, கோழி விலை உயர்வு நாட்டுக்கோழி ரூ260 ஆடு ரூ11 ஆயிரம்**

போச்சம்பள்ளி, : இஸ்லாமியர்களின் புனித பண்டிகையான ரம்ஜான் நாளை நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்நிலையில் நேற்று போச்சம்பள்ளியில் கூடிய வாரச்சந்தையில் 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆடுகள் விற்பனையானது. கடந்த வாரம் ஒரு கிலோ நாட்டுக்கோழி ரூ150க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த வாரம் கிலோ 260 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் ஆடுகள் விற்பனை ஜோராாக நடைபெற்றது. ஒரு ஆடு ரூ3500 முதல் 11 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. பண்டிகை காலம் என்பதால் விலையை பொருட்படுத்தாமல் வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கிச் சென்றனர். ஆடி 18க்கு ஆடு மற்றும் கோழிகளின் விலை மேலும் உயரும் என விவசாயிகள் தெரிவித்தனர். இந்த வாரம் சுமார் 3 ஆயிரம் கோழிகள் மற்றும் 2 ஆயிரம் ஆடுகள் விற்பனையானது.

**போச்சம்பள்ளியில் சின்னவெங்காயம் கிலோ ரூ25க்கு விற்பனை**

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளி வாரச்சந்தையில் சின்னவெங்காயம் விலை சரிந்து ஒரு கிலோ ரூ25க்கு விற்பனை செய்யப்பட்டது. போச்சம்பள்ளி வாரச்சந்தையில், வரத்து குறைந்ததால், அனைத்து காய்கறிகளின் விலையும் கடந்த வாரம், இருமடங்காக அதிகரித்து காணப்பட்டது. மேலும் சின்னவெங்காயம் ஒரு கிலோ சின்னவெங்காயம் ரூ32 முதல் 35 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால், நேற்று கூடிய சந்தையில், சின்னவெங்காயத்தின் விலை சரிந்து ஒரு கிலோ ரூ25 முதல் 28 வரை விற்பனை செய்யப்பட்டது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**பசுமை புதுமை காய்கறி கடை மூலம் குறைந்த விலையில் காய்கறி விற்பனை**

ஊட்டி, : தோட்டக்கலைத்துறை சார்பில், பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தின் கீழ், ஊட்டியில் தற்போது காய்கறி சேகரிப்பு மையம் மற்றும் கொள்முதல் மையம் துவக்கப்பட்டுள்ளது. இதற்காக சந்தை ஒருங்கிணைப்பாளர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு,

இடைத்தரகர்கள் தலையீடுயின்றி விவசாயிகளிடம் இருந்து நேரடியாக காய்கறிகளை பெற்று, அவற்றை பொதுமக்களிடம் நேரடியாக விற்பனை செய்வதாகும். காய்கறிகளை கோவைக்கு கொண்டு சென்று நேரடியாக விற்பனை செய்வதற்காக வாகனங்கள் வாங்கவும், கடைகள் வைக்கவும் அரசு 40 சதவீத மானியம் வழங்கியுள்ளது. விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் காய்கறிகள் பசுமை புதுமை காய்கறி கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் சமவெளி பகுதிகளில் விளைய கூடிய காய்கறிகளை விவசாயிகளிடம், ஒருங்கிணைப்பாளர் மூலம் பெற்று அவற்றையும் நீலகிரிக்கு கொண்டு வந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஊட்டி எட்டின்ஸ் சாலையில் பசுமை புதுமை காய்கறி கடை துவக்கப்பட்டுள்ளது. இந்த கடையில் குறைந்த விலையில், நீலகிரி மாவட்டத்தில் விளையும் காய்கறி மட்டுமின்றி, சமவெளிப் பகுதிகளில் விளையும் காய்கறிகளும் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் நாள்தோறும் வெவ்வேறு பகுதிகளில் சந்தை அமைத்து அதன் மூலம் மக்களுக்கு அவர்கள் இருக்கும் இடங்களிலேயே குறைந்த விலையில் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம்பொதுமக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது. இதுகுறித்து பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்ட சந்தை ஒருங்கிணைப்பாளர் பாலகிருஷ்ணன் கூறுகையில், பெரு நகர காய்கறி தொகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக காய்கறிகள் கொள்முதல் செய்து, அதனை குறைந்த விலையில் பசுமை புதுமை காய்கறி கடை மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதற்காக பசுமை புதுமை காய்கறி கடை திறக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக நாள்தோறும் ஒவ்வொரு கிராமங்களிலும் வாகனம் மூலம் காய்கறிகள் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் ஞாயிற்று கிழமையன்று தள்ளுபடி விலையில் காய்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இதன் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் தரமான காய்கறி கிடைக்க வழிவகுக்கிறது என்றார்.

**ஆத்தூர் அம்மம்பாளையம் பால் குளிரூட்டும் நிலையம் 1.5 கோடியில் நவீனமயமாகிறதுசட்டசபையில் அமைச்சர் தகவல்**

ஆத்தூர், : ஆத்தூர் அம்மம்பாளையத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம் தி1.5 கோடி செலவில் நவீனமயமாகிறது என எம்எல்ஏவின் கோரிக்கைக்கு பதிலளித்து அமைச்சர்பேசினார். சேலம் மாவட்டம் ஆத்தூர் எம்எல்ஏ மாதேஸ்வரன் தமிழக சட்டமன்ற கூட்ட தொடரில் ஆத்தூர் அம்மம்பாளையம் ஊராட்சியிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா? என்று கேள்வி நேரத்தின் போது பேசினார். இதற்கு பதிலளித்து பேசிய பால் வளத்துறை அமைச்சர் மாதவரம் மூர்த்தி ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலையமானது தினசரி 1.30 லட்சம் லிட்டர் பாலினை கையாளும் திறன் கொண்டதாகும். இதனை நவீனப்படுத்த ரூ 1.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய எடை மேடை, புதிய மின்னணு கணணி எடைபோடும் இயந்திரம், தரைத்தளங்கள் செப்பனிடும் பணிகள், கான்கிரீட் நடைபாதை அமைத்தல், புதிய கூரை அமைத்தல், புதியதாக கன்டென்சர் யூனிட் நிறுவுதல் பணிகளும் நடைபெற்றுவருகின்றன. மேலும் தி80 லட்சம் செலவில் ஆரியபாளையம், வெள்ளாளப்பட்டி ஆகிய இரண்டு இடங்களில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு தொகுப்பு பால் குளிர்விப்பான் நிறுவும் பணியும் நடைபெற்று வருகின்றன என சட்டமன்ற கூட்டத்தில் தெரிவித்தார். இதனை தொடர்ந்து பால் குளிரூட்டும் நிலையத்தை நவீனப்படுத்த நிதி ஒதுக்கிய தமிழக முதல்வர் ஜெயலலிதா, அமைச்சர் மாதவரம் மூர்த்தி ஆகியோருக்கு தொகுதி மக்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் சார்பில் நன்றி தெரிவித்தார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**283 பேருக்கு விலையில்லா ஆடுகள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் வழங்கினார்**



ஈரோடு, மேட்டுநாசுவம்பாளையம் ஊராட்சியில் 283 பேருக்கு ரூ.37¼ லட்சம் மதிப்பிலான விலையில்லா ஆடுகளை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் வழங்கினார். ரூ.37¼ லட்சத்தில் விலையில்லா ஆடுகள்பவானி அருகே உள்ள மேட்டுநாசுவம்பாளையம் ஊராட்சிக்கு உள்பட்டவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா காலிங்கராயன்பாளையத்தில் நடந்தது. விழாவுக்கு மாவட்ட கலெக்டர் சண்முகம் தலைமை தாங்கினார். எம்.எல்.ஏ.க்கள் கே.வி.ராமலிங்கம், ஆர்.என்.கிட்டுசாமி, செல்வகுமார சின்னையன் எம்.பி., ஈரோடு மாநகராட்சி மேயர் மல்லிகா பரமசிவம், துணை மேயர் கே.சி.பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் கலந்து கொண்டு 283 பேருக்கு ரூ.37 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பில் 1,132 விலையில்லா ஆடுகளை வழங்கி பேசினார். அப்போதுஅவர்கூறியதாவது:-

ஆடுவளர்ப்புபயிற்சி

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை முதல்-அமைச்சர் ஜெயலலிதா நிறைவேற்றி வருகிறார். ஏழ்மையிலும் ஏழ்மையான குடும்பங்களின் வாழ்க்கைப் பொருளாதாரத்தை உயர்த்திட அரசின் மூலம் விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது. பயனாளிகளுக்கு 4

ஆடுகள் வாங்குவதற்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்படுகிறது. எனவே பயனாளிகள் அவர்களே சந்தைக்குச் சென்று தங்களுக்கு பிடித்த ஆடுகளை தேர்வு செய்து கொள்ளலாம். மேலும் போக்குவரத்து செலவாக ரூ.150, காப்பீட்டுத் தொகையாக ரூ.300, கொட்டகை அமைக்க ரூ.2 ஆயிரம் அரசால் வழங்கப்படுகிறது. அதுமட்டுமின்றி ஆடுகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

முன்னுதாரணம்

ஈரோடு மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 11 ஆயிரத்து 887 பேருக்கு ரூ.15 கோடியே 24 லட்சம் மதிப்பில் 47 ஆயிரத்து 548 ஆடுகள் வழங்கப்பட்டு உள்ளது. இந்த ஆடுகள் ஈன்ற குட்டிகளின் எண்ணிக்கை மட்டும் 58 ஆயிரத்து 441 ஆகும். அரசால் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகளை கால்நடை பராமரிப்புத்துறை டாக்டர்கள் மாதந்தோறும் ஆய்வு செய்து அவைகளுக்குத் தேவையான சிகிச்சை, தடுப்பூசி, குடற்புழு நீக்கம் ஆகிய பணிகளை செய்து வருகிறார்கள். மேலும் அரசின் மூலம் விலையில்லா 20 கிலோ அரிசி, 60 வயதுக்கும் மேற்பட்ட முதியோர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1000, ஏழைப்பெண்களின் திருமணத்துக்கு திருமண நிதியுதவி மற்றும் திருமாங்கல்யத்திற்கு தங்கம் ஆகியவைகள் வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மழைநீர் சேகரிப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை இந்திய பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளார். அனைத்து மாநிலத்துக்கும் தமிழக அரசின் திட்டங்கள் முன்னுதாரணமாக உள்ளன. ரூ.91கோடி காலிங்கராயன் வாய்க்கால் மாசுபடாமல் காத்திட முதல்-அமைச்சர் ஜெயலலிதா ரூ.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வாய்க்காலில் கான்கிரீட் தளம் மற்றும் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு உள்ளது. கழிவு நீர் செல்வதற்கு தனியாக பேபி வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.7 கோடி மதிப்பீட்டில் காலிங்கராயன் அணைக்கட்டு விரைவில் புனரமைக்கப்பட உள்ளது. பவானி புறவழிச்சாலை அமைப்பதற்கான ஆய்வுப்பணி விரைவில் முடிவடையும் நிலையில் உள்ளது. இவ்வாறு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் கூறினார். விழாவில் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் கண்ணம்மாள் முத்துச்சாமி (ஈரோடு), தங்கவேல் (பவானி), மாநகராட்சி மண்டல தலைவர் மனோகரன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கிருஷ்ணராஜ், ஈரோடு மாவட்ட

கூட்டுறவு சங்க தலைவர் தெய்வநாயகம், கூட்டுறவு வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் லிங்கேஸ்வரன், மேட்டுநாசுவம்பாளையம் கூட்டுறவு கட்டிட வசதி சங்க தலைவர் எஸ்.மகேஸ்வரன், ஆவின் துணைத்தலைவர் சுப்பிரமணியம், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ஏ.கே.பழனிசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கேரளாவிற்கு விற்பனை கூடலூர் பகுதியில் கால்நடை தீவன தட்டுப்பாடு**

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முல்லைப்பெரியாறு அணை மூலம் 14 ஆயிரத்து 707 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த பகுதி மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் இருந்தாலும், அனைவரும் வீட்டில் கால் நடைகளை வளர்த்து வருகின்றனர். ஒருசிலர் விலை உயர்ந்த கறவை மாடுகளை வாங்கி வளர்க்கின்றனர். தினசரி சுமார் 50 ஆயிரம் லிட்டர் பால் கேரளாவிற்கு கொண்டு செல்லப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் கால்நடை வளர்ப் பவர்கள் அவதி அடைந்து வந்தனர். ஊற்றுநீர் மற்றும் விலைக்கு வாங்கிய தண்ணீர் மூலம் நெல் சாகுபடி செய்த விவசாயிகளிடம் இருந்து வைக்கோல் புல்லை கால்நடை வளர்ப்பவர்கள் வாங்கி பயன்படுத்தி வந்தனர். இந்த நிலையில் கேரள மாநிலத்தில் கால்நடை வளர்ப்பவர்கள் அங்கு இருந்து தேனி மாவட் டத்தின் கம்பம், கூடலூர் பகுதிகளுக்கு வந்து கூடுதல் விலை கொடுத்து வைக்கோலை வாங்கி செல்கின்றனர். இதனால் தமிழக பகுதியை சேர்ந்த விவசாயிகள் தீவனம் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். மேலும், தீவனம் இல்லாமல் கறவை மாடுகள் வளர்ப்பவர் கள் கவலை அடைந்துள்ளனர். எனவே மானிய விலையில் வைக்கோல் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூடலூர் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தியாகதுருகம் பகுதியில் மக்காச்சோளம் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**



தியாகதுருகம் பகுதியில் மக்காச்சோளம் பயிரிடு வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மக்காச்சோளம் விழுப்புரம் மாவட்டம் தியாகதுருகம் பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போன தால் பெரும்பாலான விவ சாயிகள் தங்களது விளை நிலங்களில் கரும்பு, நெல் உள்ளிட்ட பல்வேறு பயிர் களை சாகுபடி செய்ய முடியா மல் கடும் அவதிடைந்து வந்தனர். இந்தநிலையில், தியாகதுருகம் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பருவ மழையை நம்பியும் கிணற்றில் கிடைக்கும் குறைந்த அளவு தண்ணீரை கொண்டு தங்களது விளை நிலங்களில் குறைந்த காலத்திற்குள் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் மக்காச்சோளத்தை அதிக அளவில் ஆர்வத் துடன் பயிர் செய்து வருகின்றனர். 40 மூட்டைகள் இதுகுறித்து வேளாண்மை அதிகாரி ராமச்சந்திரன் கூறியதாவது:–

90 – 120 நாட்களில் அறு வடைக்கு தயாராகும் இந்த மக்காச்சோளம் பயிருக்கு 5 முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். தியாகதுருகம் பகுதி விவசாய நிலங்களுக்கு கங்கா 5, கோ எச் 4, 5 ஆகிய ரகங்கள் ஏற்றது. பயிர்செய்த 20 நாளில் களை எடுத்து 54 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 20 கிலோ சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களை இடவேண்டும். ஒரு ஏக்கருக்கு 25 – 40 மூட்டைகள் வரை விவசாயிகளுக்கு மகசூல் கிடைப்பதால் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் தற்போது ஆர்வத்துடன் மக்காச் சோளத்தை பயிர்செய்து வருவதாக கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

## சோளம் விலை என்ன?



சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முன்னரே தகவல் தெரிவிக்கும் வகையில் சோளத்துக்கான விலை குறித்த கணிப்பை திருச்சியில் உள்ள வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் வெளியிட்டுள்ளது.இது தொடர்பாக அந்த மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், "இந்தியாவில்சோளம் பயிரிடும் பரப்பு 1961 முதல் 2011 வரையிலான காலத்தில் 18.2 மில்லியன்ஹெக்டேரிலிருந்து 6.3 மில்லியன் ஹெக்டேராக குறைந்துள்ளது. மேலும், இதன்உற்பத்தி 8 மில்லியன் டன்களிலிருந்து 6 மில்லியன் டன்களாக குறைந்துள்ளது. ஆனால் உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 440 கிலோவிலிருந்து 961 கிலோவாக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் தானியம் மற்றும் தீவனப் பயிராக சோளம் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் நடைபெறும் சோளம் சாகுபடியில் திண்டுக்கல், திருச்சி, கோவை, கரூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் மட்டும் 76 சதவீதம் அளவுக்கு நடைபெறுகின்றன. திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் பாரம்பரிய விதை வகைகளான மஞ்சள் சோளம், வெள்ளைச் சோளம், கரிச் சோளம், காரடிச் சோளம் ஆகியவையும்,மேலும் சி 030, பிஎஸ்ஆர்ஜ மற்றும் சிஎஸ்எச் 5 ஆகிய ரகங்களும் பயிரிடப்படுகின்றன. தமிழகத்தில் ஜூலை - அக்டோபர், அக்டோபர் - பிப்ரவரி மற்றும் கோடைப்பருவத்திலும் சோளம் சாகுபடி நடைபெறுகிறது. சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில் இந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் ஒரு கிலோ சோளத்துக்கு ரூ.18 மற்றும் ரூ.19 விலை கிடைக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. மேலும் விவரங்கள் அறிய

மையத்தின் துணை இயக்குநரை 94435 93971 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**பறவைத் தடுப்பு வலைகள்**



திராட்சை உள்ளிட்ட பழத் தோட்டங்களில் பறவைகளால் விவசாயிகளுக்கு பெருமளவு மகசூல் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, தோட்டங்களில் உள்ள பழங்களை பறவைகள் சேதப்படுத்துவதைத் தடுக்கும் வகையில் பறவைத் தடுப்பு வலைகளை விவசாயிகள் பயன்படுத்தலாம் என தமிழக அரசின் தோட்டக்கலைத் துறையினர் தெரிவிக்கின்றனர். தேனி மாவட்டத்தில் திராட்சைத் தோட்டங்களில் பறவைத் தடுப்பு வலைகள் அமைக்க தேசிய தோட்டக் கலை இயக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. ஆலங்கட்டி மழை பெய்யும்போது ஏற்படும் பாதிப்புகளையும் இந்த பறவைத் தடுப்பு வலைகளைக் கொண்டு தடுக்கலாம்.